# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor SelangorTV selangortv.my MediaSelangor SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் / செப்டம்பர் 10/2023 / SEPTEMBER 10/2023


# டத்தோஸ்ரீ அமிருடின்

## சிலாங்கூர் மந்திரி புசாராக பதவியேற்றார்

**ஷா ஆலம்,** கடந்த ஆக 21 ல் கிள்ளான் அரச நகரிலுள்ள இஸ்தானா ஆலம் ஷா வில் மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் முன்னிலையில் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இரண்டாவது தவணைக்கு சிலாங்கூர் மந்திரி புசாராக பதவியேற்றார். இந்நிகழ்வில் அமிருடின் மந்திரி புசாராக பதவி உறுதி மொழியும் ரகசிய காப்பு பிரமாணமும் எடுத்துக் கொண்டதோடு பதவி நியமனக் கடிதத்தையும் பெற்றுக் கொண்டார்.

பின்னர் ஆகஸ்ட் 23 ந் தேதி ஷா ஆலமில் உள்ள சிலாங்கூர் மாநில அரசின் தலைமையகத்தில் நடைபெற்ற புதிய தவணைக்கான முதலாவது ஆட்சிக்குழு கூட்டத்திற்கு மந்திரி புசார் தலைமை தாங்கினார்.

மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் அங்கீகாரத்தை பத்து ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கான நியமனத்திற்கான இசைவை பெற்ற பின் , மாநில அரசு தலைமைச் செயலகத்தின் 20 மாடியிலுள்ள கூட்ட அறைக்கு காலை 10.00 மணிக்கு வந்த டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியை அரசாங்க முக்கிய அதிகாரிகளும் பத்து ஆட்சிக்குழு உறுப்பினர்களும் வரவேற்றனர்.

மேலும் செய்திகளுக்கு பக்கம் 3 >>



## புதிய ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு வீ. பாப்பாராய்டு

2023ம் ஆண்டு மாநில தேர்தலுக்குப் பின் சிலாங்கூர் மாநில ஆட்சி குழுவில் இடம்பெற்றுள்ள 10 ஆட்சிக்குழு உறுப்பினர்களில் ஒருவரான பந்திங் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு வீ. பாப்பாராய்டுவும் ஒருவர். அவர் மாநில மனித வளம் மற்றும் வறுமை ஒழிப்பு , பழங்குடியினர் சிறுபான்மையினர் துறை பொறுப்புகளுடன். லீமாஸ் எனப்படும் சிலாங்கூர் மாநில பௌத்தம், கிறிஸ்துவம், சீக்கிய மற்றும் இந்து சமய விவகார துறைக்கும் இணைத் தலைவராக பொறுப்பு ஏற்றுள்ளார். பத்தாங் பெர்ஜூந்தை, மின்யாக் தோட்டத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ புவன மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்திர திருவிழாவில் சிறப்பு பிரமுகராக கலந்து கொண்டார். அவருக்கு ஆலய நிர்வாகத்தினர் சார்பில் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி பூரண மரியாதை வழங்கப்பட்டது.

## மித்ரா நிதி மக்களுக்கு முழுமையாகச் செலவிடப்படும்

**கோலாலம்பூர்,** மித்ரா எனப்படும் மலேசிய இந்திய சமூக உருமாற்ற பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு வெள்ளிகூட பிரதமர் துறையிடம் திரும்ப ஒப்படைக்கப்படாது.

அந்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒவ்வொரு வெள்ளியும் இந்திய சமூகத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுவது உறுதி செய்யப்படும். கடந்த 16 ஆண்டுகளாக அந்நிதி திருப்பி அனுப்பப்பட்டு வந்த நிலைக்கு முடிவு கட்டப்படும் என்று, இவ்வாண்டிற்கான மித்ரா திட்டங்களின் ஆகக் கடைசி நிலவரங்கள் குறித்து செய்தியாளர் கூட்டத்தில் தலைவர் டத்தோ ஆர். ரமணன் விளக்கினார்.

இந்திய சமுதாய மேம்பாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் மித்ராவுக்கு 100 மில்லியன் வெள்ளி ஒதுக்கப்படுகிறது. இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து அவர் கூறுகையில்,

1. அரசு மற்றும் தனியார் உயர் கல்வி மாணவர்கள் உதவித் தொகை திட்டத்திற்கு இதுவரை 8,583 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளது. மொத்தம் 10 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த திட்டத்தில் வாய்ப்பு உண்டு. முதல் கட்டமாக 2,492 பேருக்கு தலா 2 ஆயிரம் வெள்ளி வழங்கப் பட்டுள்ளது. ஆகவே வரும் செப்டம்பர் 15ஆம் தேதிக்குள் இதற்கு மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம்.

2. 107 பாலர் பள்ளிகளுக்கான உதவித் திட்டத்தில் 2,993 மாணவர்களுக்கான 7,183,200 ரிங்கிட் செலுத்தப்பட்டு, இன்னும் 38 பள்ளிகளுக்கு விரைவில் பட்டுவாடா செய்யப்படும்.

3. சிறுநீரக சுத்திகரிப்புக்கான உதவி திட்டத்திற்கு 8,640 மில்லியன் ஒதுக்கப்பட்டு 135 மையங்களில் இருந்து 749 பேர் மற்றும் தனிப்பட்ட முறையில் 813 நோயாளிகளிடமிருந்து விண்ணப்பம் கிடைத்துள்ளது.

4. நாடாளுமன்ற தொகுதிக்கு 1 லட்சம் வெள்ளி திட்டத்தில் 36 தொகுதிகள் பணம் பெற்றுள்ளன.

5. இதே போன்று 525 தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி திட்டத்திற்கு கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. குறிப்பாக 30 மில்லியன் வெள்ளி அடங்கிய மித்ரா மானியத் திட்டத்திற்கு பரிசீலனைகள் முறையாக நடைபெற்று வருகிறது. ஆக மொத்தத்தில் மித்ராவுக்கு ஒதுக்கப்பட்ட 100 மில்லியனில் 28 மில்லியன் வெள்ளி செலவு செய்யப்பட்டுள்ளது. 89.8 மில்லியன் வெள்ளிக்கான திட்டங்கள் வரிசையாக உள்ளது. ஆக மொத்தத்தில் இந்த 100 மில்லியன் வெள்ளியை முறையாக செலவு செய்வதில் தான் உறுதியாக உள்ளதாக கூறினார்.

# 45 – ஆம் ஆண்டின் திருமுறை ஓதும் விழா



**கோல சிலாங்கூர்,** கோல சிலாங்கூர் வட்டாரப் பேரவை ஏற்பாட்டில் 45-ஆம் ஆண்டு திருமுறை ஓதும் விழா கடந்த 13-08-2023 – ஆம் திகதி ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயத்தில் மாணவர்கள் காலை பூஜையுடன் தொடங்கி புக்கிட் பிலிங்பிங் தேசிய வகை ரிவர் சைட் தமிழ் பள்ளியில் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்களுக்கான திருமுறை, பஞ்சப் புராணம், பேச்சு போட்டிகள் என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற திருமுறை விழாவின் முதல் அங்கமாக பிரிவு 1,2,3,4,5,வகுப்பு மாணவ-மாணவிகளுக்கு திருமுறை போட்டிகள் நடைபெற்றது. 5 -நடுவர்களை கொண்ட குழுவினர் காலை 8:00 -மணி தொடங்கிய போட்டியை நண்பகல் 12:00 -மணி வரையில் நடத்தினர்.

அதனைத்தொடர்ந்து நண்பகல் 1:00-அளவில் கோலசிலாங்கூர் வட்டாரப் பேரவையின் தலைவர், தொண்டர்மணி திரு .பன்னீர்வேலு பேசுகையில் முதலில் அனைத்து பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகளை தகுந்த நேரத்தில் அழைத்து வந்துள்ளதுடன், பிள்ளைகளைச் சமய நிகழ்வுகளில் ஈடுப் படுத்தியதற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்து கொண்டார்.

அதே வேலையில் இனி வரும் காலங்களில் நிகழ்வுக்கு வரும் பெற்றோர்களும் , கலாச்சார, சமய உடைகளை அணிந்து வந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என ஆலோசனை கூறினார். ஒவ்வொரு ஆண்டும் பெற்றோர்கள் தங்கள் கடமைகளை சரியாக ஆற்ற பாடுப்பட கேட்டுக்கொண்ட அவர், அப்படிப்பட்ட செயல்களின் வழி நம் பிள்ளைகளுக்கு நாம் நல்ல முன்னுதாரணம் ஆகிறோம் என்றார்.

நம் பிள்ளைகளை சிறந்தவர்கள் ஆக்க நாம் அளிக்கும் ஊக்குவிப்பு மற்றும் வழிகாட்டல் படியே எதிர்காலத்தில் அவர்கள் நடப்பார்கள். இது போன்ற நிகழ்வுகள் சமூதாய இயக்கங்களின் சிறு பங்களிப்பு அதில் கலந்துக்கொண்டு பிள்ளைகளை உற்சாக படுத்தும் அதே வேளையில் , அவர்களை சிறந்த பிரஜைகளாக நாம் உருவாக்க பங்களிக்கிறோம் என்றார்.

இன்று இங்கு வந்திருக்கும் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். அனைவரும் நன்றாகத் திருமுறைப் பாடல்களைப் பாடி பரிசுகள் வாங்க வேண்டும் என்று ஆயத்த நிலையில் இருப்பீர்கள். எனவே இந்தத் தருணத்தில் அனைவருக்கும் வாழ்த்துகள் என கூறி விடை பெற்றார் கோல சிலாங்கூர் வட்டாரப் பேரவையின் தலைவர் திரு பன்னீர் வேலு.

பள்ளியின் தலைமை ஆசிரியர் ராமசாமி நடேசன் அவர்களின் உரையில் இன்று நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தன் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார். இன்றைய நிகழ்வுகள் நிறைய மாணவர்கள் பாரம்பரிய உடையில் வந்துள்ளதை பாராட்டிய அவர் அதற்கு பெருமைப் படுவதாக கூறினார். அதுப் போல, பெற்றோர்கள் நமது சமயத்தை வளர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் பிள்ளைகளை ஆலயங்களுக்குச் செல்வதைக் கட்டாயப் படுத்திக் கொள்ள வேண்டும்.


அப்பொழுதுதான் அவர்களுக்கு நமது பாரம்பரியத்தின் உன்னதம் தெரியும், அவர்களும் அதை போற்றி வளர்பார்கள், சுயமாக சமய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். நமது பாரம்பரிய உடையை அணிந்து வருவதும் அதில் ஒரு அங்கமே, "நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்" என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார் பள்ளியின் தலைமை ஆசிரியர்.

கோலசிலாங்கூர் வாகீசர், காந்திஜீ, சுங்கை திராப், ராஜா முசா, ரிவர் சைட், கோல சிலாங்கூர் தோட்டம், புக்கிட் ரோத்தான், கம்போங் பாரு, என – 8-தமிழ்ப்பள்ளிகளின் சுமார் 250 – மாணவர்கள் இத்திருமுறை விழாவில் கலந்து கொண்டனர்.

இத்திருமுறை விழாவில் நிறைவாக போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த பிரிவுகளில் பரிசுகள் வழங்கப்பட்டன. அதோடு வெற்றி பெற்ற மாணவர்கள் வரும் 27/08/2023 – ஆம் திகதி கிள்ளானில் நடைபெறும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்று கூறி வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கோலசிலாங்கூர் வட்டார பேரவையின் செயலாளர் விவேக நாயகன் திரு : பூபாலன் ரெங்கசாமி விடைபெற்றார்

# நீரில் மூழ்கி இறந்தவர்களின் குடும்பத்திற்கு இன்சான் பொதுக் காப்பீடு தொகை





**கோலா லங்காட்,** கோலா லங்காட்டில் மூன்று சகோதரிகள் நீரில் மூழ்கி இறந்த சம்பவம் அவ்வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை நாடு அறியும்.

அந்த குடும்பத்துக்கும், அவர்களது தாய்- தந்தைக்கு ஒரே நேரத்தில் மூன்று பிள்ளைகளை பறிகொடுத்த வேதனை துயரம் சொல்லில் அடங்காது. வயதான காலத்தில் தங்களுக்கு கஞ்சி ஊற்றும் என்ற நம்பிக்கையை உடைத்த அசம்பாவிதமாக அந்த மூன்று சகோதரிகளின் மரணம் அமைந்து விட்டது வருத்தப்பட வேண்டிய சம்பவமாகும்.

இது போன்ற துயர சம்பவம் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. இன்று அந்த குடும்பத்திற்கு ஏற்பட்ட விபரீதம் நாளை இன்னொருவருக்கு ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டே சிலாங்கூர் மாநில அரசு பெரிய பொருட் செலவில் மாநில மக்கள் அனைவருக்கும் காப்பீடு திட்டத்தை ஏற்படுத்தியது.

மூன்று மகள்களைப் பறிகொடுத்த திருமதி அஞ்சலையைத் தேடி தாமான் கெம்பிராவில் உள்ள அவரது இல்லத்திற்கு கடந்த ஆகஸ்ட் 29 தேதி மீடியா சிலாங்கூர் சென்றது. அங்கு அவர்களின் 52 வயது தாயாரான கே அஞ்சலை மற்றும் அவரின் கணவரை சந்தித்தது.

அந்த தாயார் தனது மகள்களின் துயர பிரிவினை நினைவு கூறிய வேளையில், நீரில் மூழ்கி தனது மூன்று பிள்ளைகள் இறந்ததை தொடர்ந்து பெறப்பட்ட சிலாங்கூர் பொதுக் காப்பீட்டுத் திட்டத்தின் (இன்சான்) இழப்பீட்டுத் தொகையின் நகலையும் மீடியா சிலாங்கூரிடம் காட்டினார். அச்சமயம் அவர்களின் தந்தையான லெட்சுமணன் சுப்பையாவும் (58) உடன் இருந்தார்.

"இதுப் போன்ற அசம்பாவிதங்களைத் தவிர்க்க முடியாது, எங்கள் பிள்ளைகளின் உயிர் விலை மதிப்பற்றது. ஆனால், அரசாங்கம் வழங்க வரும் சில உதவிகளை கூட பெற முடியாமல் நாம் இருக்க கூடாது" என்றார்.

இது குறித்து கருத்துரைத்த மீடியா சிலாங்கூர் அதிகாரி, ஒவ்வொரு சம்பவமும் நமக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது. பல ஊர்களிலிருந்து சிலாங்கூருக்குக் குடியேறியவர்கள், இங்கு தொழில் புரிபவர்கள், இம்மாநிலத்தில் வசிப்பதற்கான ஆதாரங்களின்றி உள்ளனர்.

அவர்களுக்கு இது போன்ற உதவிகள் கிட்டுவதில்லை. அதனால் நாம் குடியிருக்கும் இடத்திற்கு ஏற்ப நமது அடையாள அட்டையின் முகவரியை மாற்றி கொள்வதுடன். சிலாங்கூர் வாக்காளர்களாகப் பதிந்து கொள்ளுங்கள். அதனால் பல மக்கள் நலன் திட்டங்களில் பங்கெடுக்க, அது உதவியாக இருக்கும் என்றார்.

## சவால்களை எதிர்கொள்ள ஒன்றுபடுவோம்

**ஷா ஆலம்,** மக்கள் ஒருமைப்பாட்டை அமல்படுத்தி ஒற்றுமையுடன் வாழ்வதற்குரிய சூழலை ஏற்படுத்தும் பட்சத்தில் பொருளாதாரச் சிக்கல்கள் உட்பட அனைத்து விதமான சவால்களையும் நாடு எதிர்கொள்ள முடியும். பொருளாதாரம் மற்றும் வட்டார முதலீட்டில் ஆதிக்கம்செலுத்துவதற்குஅனைத்துநாடுகளும்தற்போதுபோட்டியிட்டு வருவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

பொருளாதார ஆதிக்கத்தை பெறுவதற்கும் முடிந்தால் நில ஆதிக்கத்தை பெறுவதற்கும் அண்டை நாடுகளும் வட்டார நாடுகளும் வாய்ப்புகளைத் தேடி அலைவதை நாம் காண்கிறோம்.

மக்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமை மட்டுமே நம்மை பலப்படுத்தும். மாநிலத் தேர்தல் முடிவுக்கு வந்துள்ள நிலையில் நாம் ஒன்றுபடுவதற்குரிய தருணம் வந்து விட்டது. காரணம் பெரிய சவால்கள் நமக்காக காத்திருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் 66வது தேசிய தினத்தை முன்னிட்டு இங்குள்ள மெர்டேக்கா சதுக்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார். அவதூறான செய்திகள் எத்தகைய மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஹாங் துவா மற்றும் ஹாங் ஜெபாட் போன்ற வரலாற்று நாயகர்களின் கதைகள் மூலம் மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

அவதூறு காரணமாக நாடும் மாநிலமும் அழிந்து தரைமட்டம் ஆகிவிடும். ஆகவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு அவதூறுகளை முறியடிப்போம் என அவர் சொன்னார்.



**டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி (43)**

**பொறுப்பேற்கும் துறைகள்**

- நிலம் மற்றும் இயற்கை வள மேம்பாடு
- நிதி மற்றும் பொருளாதார நடவடிக்கை
- அரசு நிர்வாகத்தின் நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்
- மூலோபாய தொடர்பு
- கல்வி மற்றும் மனித மூலதன வளர்ச்சி

**கல்வி**

- மனித மேம்பாட்டு அறிவியல் இளங்கலை, புத்ரா மலேசியா பல்கலைக்கழகம்

**அரசியல் ஈடுபாடு**

- மந்திரி புசார் சிலாங்கூர்
- கோம்பாக் நாடாளுமன்ற உறுப்பினர்
- நிதி பொருளாதாரம், நில மேம்பாடு, இயற்கை வளங்கள், மூலோபாய தொடர்பு, கல்வி, புதுமை கலாச்சாரம், ஸ்மார்ட் சிலாங்கூர் ஆகியவற்றின் நிலைக்குழுவின் தலைவர்
- மனித மேம்பாடு, விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் தொழில்முனைவுக்கான பொறுப்பு உறுப்பினர் (2014-2018)
- சுங்கை துவா மாநில சட்டமன்ற உறுப்பினர் ( (2008-தற்போது)
- கெஅடிலான் தேசிய உதவித் தலைவர் (2022-தற்போது)
- கெ அடிலான் உச்ச மன்றக்குழு உறுப்பினர் (2009-தற்போது)
- சிலாங்கூர் ஹராப்பான் தலைவர் (2018-தற்போது)
- கோம்பாக் கெ அடிலான் தொகுதியின் தலைவர் (2018-தற்போது)

**தொழில்/சமூக ஈடுபாடு**

- சிலாங்கூர் கால்பந்து சங்கத்தின் மேலாளர்
- சிலாங்கூர் விளையாட்டு கவுன்சில் துணைத் தலைவர்
- அடிப்படை ஆய்வுகள் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர்

## கட்சி வேறுபாடின்றி ஒருமித்தக் குரலாக ஒலிப்போம்

**ஷா ஆலம்,** அரசியல் கட்சி வேறுபாடின்றி சிலாங்கூரிலுள்ள ஒவ்வொரு பிரஜையின் குரலாக மாநில ஒற்றுமை அரசாங்கம் ஒலிக்கும் என்று மந்திரி புசார் உறுதியளித்துள்ளார்.

இம்மாதம் 12ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பக்கத்தான் ஹராப்பான் பாரிசான் நேஷனல் கூட்டணி மாநிலத்தை வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்டதைத் தொடர்ந்து டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இந்த உறுதி மொழியை வழங்கினார்.

நாங்கள் மக்கள் குரலாக இருப்போம். அரசியல் சித்தாந்த வேறுபாடின்றி மாநில மக்கள் அனைவரையும் நாங்கள் தற்காப்போம் என அவர் தனது பேஸ்புக் பதிவில் கூறினார். எவரும் கைவிடப்பட மாட்டார்கள். மாநிலம் மற்றும் மக்களின் சுபிட்சத்தை உறுதி செய்வதற்கு நாங்கள் ஒற்றுமையை வலுப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். அதே சமயம், மக்கள் வழங்கிய ஆணையை அனைவரும் மதிக்க வேண்டும் என்பதோடு மாநிலத் தேர்தலை காரணமாக வைத்து நிலைத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார். மொத்தம் 56 தொகுதிகள் கொண்ட சிலாங்கூர் மாநிலத்தில் 34 இடங்களைப் பெற்றதன் மூலம் மாநில பக்கத்தான் ஹராப்பான்- பாரிசான் நேஷனல் அரசாங்கம் தனிப்பெரும்பான்மையில் ஆட்சியை தக்க வைத்துக் கொண்டது. எனினும், எதிர்க்கட்சியான பெரிக்கத்தான் நேஷனலிடம் 22 இடங்களைப் பறி கொடுத்த காரணத்தால் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மையைப் பெறும் வாய்ப்பினை அது நழுவ விட்டது.

## டத்தோஸ்ரீ அமிருடின் சிலாங்கூர் மந்திரி புசாராக பதவியேற்றார்

பக்கம் 1 தொடர்ச்சி >>

இந்த கூட்டத்தின் தொடக்க அங்கமாக துஆ ஓதும் நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களும் மந்திரி புசார் முன்னலையில் பதவி உறுதிமொழி மற்றும் ரகசிய காப்பு பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

அதன்பின், மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களின் துறைகளை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிவித்தார். அவற்றில் ஐந்து முக்கியத் துறைகளை அவர் தன் வசம் வைத்திருக்கிறார்.

நிலம் மற்றும் இயற்கை வள மேம்பாடு, நிதி மற்றும் பொருளாதார நடவடிக்கை, இலக்கவியல் மற்றும் அரசு நிர்வாக நவீனமயம், தொடர்பு வியூகம், கல்வி மற்றும் மனித மூலதன மேம்பாடு ஆகிய துறைகளுக்கு மந்திரி புசார் பொறுப்பேற்கவுள்ளார்.

கின்றாரா உறுப்பினர் இங் ஸீ ஹான் முதலீடு, வர்த்தகத் துறைக்கு ஆட்சிக் குழு உறுப்பினராகவும் பண்டார் உத்தாமா உறுப்பினர் ஜமாலியா ஜமாலுடின் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மனித வளம் மற்றும் வறுமை ஒழிப்புத்துறை பந்திங் உறுப்பினர் வீ.பாப்பாராய்டுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேளையில் கோத்தா அங்கிரிக் உறுப்பினர் நஜ்வான் ஹலிமி இளைஞர், விளையாட்டு மற்றும் தொழில்முனைவோர் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார்.

சிகிஞ்சான் உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற சபாநாயகருமான இங் சுயி லிம் ஊராட்சி மன்றம் மற்றும் சுற்றுலாத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினராகவும் சுங்கை ஆயர் தாவார் உறுப்பினர் டத்தோ ரிஸாம் இஸ்மாயில் கிராம மேம்பாடு மற்றும் ஒற்றுமை துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

மேலும், பாண்டான் இண்டா தொகுதி உறுப்பினர் இன்ஜினியர் இஷாம் ஹஷிம் அடிப்படை வசதிகள் மற்றும் வேளாண் துறைக்கு பெர்ஹான் அமான் ஷா வீடமைப்பு மற்றும் கலாசார துறைக்கும் பொறுப்பேற்கவுள்ளார்.

ஸ்ரீ செத்தியா தொகுதி உறுப்பினர் டாக்டர் முகமது ஃபஹ்மி நாவுக்கு இஸ்லாமிய சமயம் மற்றும் புத்தாக்க கலாசாரத் துறையும் தாமான் டெம்ப்ளர் உறுப்பினர் அன்ஃபால் சாரிக்கு மகளிர் மேம்பாடு மற்றும் சமூக நலத் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளன.



# மக்களின் எதிர்காலத்தை சிந்தியுங்கள்

**கிள்ளான்,** வரம்பு மீறிய அரசியல் விளையாட்டில் ஈடுபடுவதை நிறுத்தி பொருளாதார ரீதியில் மாநிலத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான வழிவகைகளை ஆராயும்படி அனைத்துத் தரப்பினரையும் மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் வலியுறுத்தியுள்ளார்.

அனைத்து மக்களும் சுபிட்சத்தையும் வளப்பத்தையும் தொடர்ந்து அனுபவிப்பதற்கு ஏதுவாக பல்லின மக்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

அரசியல் நடத்தியது போதும், மக்கள் களைத்து விட்டார்கள். நானும் களைப்படைந்து விட்டேன். மாநிலத்தின், நாட்டின் எதிர்காலத்தையும் நமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் எதிர்காலத்தையும் சிந்தித்துப் பாருங்கள் என்றார் அவர்.

நேற்று இங்குள்ள இஸ்தானா ஆலம் ஷாவில் நடைபெற்ற மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களின் பதவியேற்புச் சடங்கில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மக்களின் நலனுக்காக நிலையான பொருளாதார வளர்சியின் மூலம் மேம்பாடு, நல்லிணக்கம் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் மாநில அரசு எழுச்சியும் வளர்ச்சியும் காணும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிதாகப் பதவியேற்ற ஆட்சிக்குழு உறுப்பினர்கள் களத்தில் இறங்குவது உள்பட சிறப்பான சேவையை வழங்கும் அதே வேளையில் ஊழல், அதிகாரத் துஷ்பிரேயோகம் போன்ற செயல்களில் ஈடுபடாமலிருப்பதன் மூலம் உயர் நெறியையும் கட்டிக் காப்பார்கள் என தாம் பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார்.

# மலேசியாவை சிறந்த நாடாக மெருகூட்ட ஒற்றுமையே நாட்டின் அச்சாணி



**புத்ராஜெயா,** பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தனது 2023ம் ஆண்டு தேசிய தின செய்தியில், மலேசியாவை ஒரு சிறந்த நாடாக மெரு கூட்டவும், நாட்டின் சுதந்திரத்தை பாதுகாப்பதில் ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

மலேசியா உலகின் எந்த நாட்டுடனும் போட்டியிடக்கூடிய ஆற்றலை கொண்டது. அதற்கான தனி திறமைநாட்டுக்கு உண்டு, நாட்டை முன்நோக்கி எடுத்து செல்ல திறமையும் ஆற்றலும் கொண்ட வல்லுநர்களுக்கு இங்கு பஞ்சமில்லை, திறமையானவர்கள் ஏராளமாக இருப்பதால் இந்த விருப்பத்தை அடைய முடியும் என்றார்.

"அபிலாசைகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு மத்தியில், நாடு ஒன்றிணைந்து நிலையான பண்பட்ட மடாணி பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும், அத்துடன், இதில் பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் நீதியான பங்கீடுகள் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாண்டு 2023 தேசிய தினத்தை ஒட்டி துணைப் பிரதமர்கள் டத்தோஸ்ரீ டாக்டர் அஹ்மட் ஜாஹிட் ஹமிடி மற்றும் டத்தோஸ்ரீ ஃபதில்லா யூசோப், கேபினட் அமைச்சர்கள், மூத்த அரசு அதிகாரிகள், குடியிருப்பாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து தேசிய தின பிரகடனம் எடுக்கும் விழாவில் ஆற்றிய எழுச்சி மிக்க உரையில் நம் நாட்டில் ஏராளமான வளம் உண்டு, அதனை ஆக்ககரமான சக்தியாக உயர்த்தும், ஆற்றலும் நமக்குண்டு புறப்படுங்கள் புதிய மடாணி யுகத்தை வடிவமைப்போம் "என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் தனது முதல் தேசிய தின செய்தியில், 7,000 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் மற்றும் நாட்டு மக்களுக்கு உற்சாகமூட்டினார்.

உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்ட விழாவில் "நாடு அந்த அபிலாஷைகளை அடைவதற்கான நிபந்தனைகளில் ஒன்று "மெர்டேகா ரக்யாட்" என்பதை உறுதி செய்வதாகும்.". இதற்கு மனதாலும் ஆத்ம ரீதியிலும் சுதந்திரமான சிந்தனையுடைய ஒரு சமூகமாக, மலேசியாவின் முன்னேற்றத்தை, அனைத்து மக்களின் சுதந்திரத்தையும் உறுதி செய்ய காலனித்துவ தேக்க சிந்தனையிலிருந்து விடுபட பிரதமர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

கடந்த 20 ஆண்டு காலம் வளர்ச்சியற்ற செயல்பாட்டிற்கு பின், மலேசியா இந்த நூற்றாண்டில் சிறந்த நாடாக வெளிப்படுவதை உறுதி செய்வதில் எல்லா இனங்களின் ஒற்றுமையான பங்களிப்பும் ஒவ்வொரு மலேசியரின் கடப்பாடும் முக்கியமானது.

இந்த நாட்டிலுள்ள எல்லா குடிமக்களின் உரிமைகளும் காத்து, எவரையும் விட்டுவிடாமல் பாதுகாப்போம் என்று மடாணி ஒற்றுமை அரசு உறுதி அளிக்கிறது, அதே வேளையில் பூமிபுத்ரா மற்றும் இஸ்லாம் மதத்தின் உரிமைகள் மற்றும் சலுகைகள் போன்ற அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்றார்.

"இந்த நாடு அனைத்து மக்களுக்கும் சொந்தமானது என்ற உணர்வை நாம் பேண வேண்டும். இந்த ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு, நம்பிக்கையான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்," என்று அவர் கூறினார்.

# மாநிலத் தேர்தல் முடிவுகளை ஒற்றுமை அரசு மதிக்கிறது

**கோலாலம்பூர்,** ஆறு மாநிலத் தேர்தல் மற்றும் கோல திரங்கானு நாடாளுமன்ற இடைத் தேர்தலின் முடிவுகளின் அடிப்படையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் கடுமையாக உழைக்க ஒற்றுமை அரசாங்கம் உறுதிப்பூண்டுள்ளது.

மலேசியா மடாணி மேம்பாடு மற்றும் மடாணி பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப தனது தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்து வலுவுடன் செயல்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

மலேசியா பெருமைப்படத்தக்க வெற்றியைப் பெறுவதை உறுதி செய்வதற்காக திங்கள்கிழமை தொடங்கி நாம் வழக்கம் போல் அல்லாமல் மேலும் கடுமையாக உழைப்போம் என்று அவர் குறிப்பிட்டார். கோலாலம்பூர் உலக வர்த்தக மையத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் தொடர்பான அறிவிப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதே சமயம் கெடா, கிளந்தான், திரங்கானு ஆகிய மாநிலங்களில் பெரிக்கத்தான் நேஷனல் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் வகையிலான தேர்தல் முடிவுகளை தாம் மதிப்பதாகவும் அவர் சொன்னார்.

சிலாங்கூர், நெகிரி செம்பிலான் மற்றும் பினாங்கில் ஒற்றுமை அரசாங்கம் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டதற்குக் கூட்டணிக் கட்சிகளின் கருத்திணக்கம் மற்றும் சபா, சரவா மாநிலக் கட்சிகள் வழங்கிய ஆதரவே காரணம் என்றும் அன்வார் கூறினார்.

இந்த தேர்தல் முடிவுகள் ஜனநாயக நடைமுறையின் படி மக்கள் எடுத்த முடிவாகும் எனக் கூறிய அவர், இந்த முடிவை மதிக்கும் அதேவேளையில் அதனை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும் என்றார்.

பிரச்சனை அல்லது ஆட்சேபனை இருந்தால் தேர்தல் ஆணையத்தின் முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி அதற்கான மனுவை முன்வைக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

# அடிப்படை வசதிகள் கொண்ட 1,010 வீடுகள் உருவாக்கம்




**கோலாலம்பூர்,** இங்குள்ள தாசேக் சுங்கை பீசியில் 1,010 கட்டுபடி விலை வீடுகளை உள்ளடக்கிய ரெசிடன்ஸி விலாயா மற்றும் ரெசிடன்ஸி பிரிஹாத்தின் மடாணி வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்படுகிறது.

இன்னும் சொந்த வீட்டைப் பெறாத நடுத்தர வருமானம் பெறும் எம்40 தரப்பினர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினரை இலக்காக கொண்டு இந்த திட்டம் அமல்படுத்தப்படுவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

மொத்தம் 1.4 ஹெக்டர் பரப்பளவில் உருவாக்கப்படும் இந்த திட்டத்தில் 902 சதுர அடி மற்றும் 908 சதுர அடி பரப்பளவிலான 910 ரெசிடன்ஸி விலாயா வீடுகள் நிர்மாணிக்கப்படும். இந்த வீடுகள் 300,000 வெள்ளி விலையில் விற்கப்படும் என்று மாநகர் மன்றம் அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.

ரெசிடன்ஸி பெரிஹாத்தின் மடாணி திட்டத்தின் கீழ் 902 சதுர அடி பரப்பளவிலான 100 வீடுகள் நிர்மாணிக்கப்படும். இதன் விற்பனை விலை 200,000 வெள்ளியாகும் எனவும் அது குறிப்பிட்டது.

முன்னதாக, ரெசிடன்ஸி விலாயா மற்றும் ரெசிடன்ஸி பெரிஹாத்தின் மடாணி வீடமைப்புத் திட்டங்களை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இங்குள்ள டேசா தாசேக் சுங்கை பீசியில் தொடக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கோலாலம்பூர் டத்தோ பண்டார் கமாருள்ஸமான் மாட் சாலே, அரசாங்கத் தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ முகமது ஜூக்கி அலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவேன்



**கிள்ளான்,** பதினைந்து ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் மாநில ஆட்சிக்குழுவில் மீண்டும் இடம் பிடித்தது குறித்து தாம் பெருமிதம் கொள்வதாக பாரிசான் நேஷனல் பிரதிநிதியான டத்தோ ரிஸாம் இஸ்மாயில் கூறினார்.

சிலாங்கூர் மாநில முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சரின் முன்னாள் அரசியல் செயலாளர் என்ற முறையில் தமக்குள்ள அனுபவத்தைக் கொண்டு மாநில அரசு நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற உதவிகளை வழங்கவுள்ளதாக அவர் சொன்னார்.

தேசிய முன்னணி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஆட்சிக்குழுவில் நான் இடம் பெற்றது மாநில அரசை மேலும் ஆக்ககரமான முறையில் நடத்துவதற்கு நிச்சயம் துணை புரியும் என்று சிலாங்கூர் மாநில அம்னோ இளைஞர் பிரிவுத் தலைவருமான அவர் குறிப்பட்டார்.

சுங்கை ஆயர் தாவார் சட்டமன்ற உறுப்பினரான ரிஸாம், கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கி சட்டமன்றம் கலைக்கப்படும் வரை மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்தார். அக்காலக்-கட்டத்தில் முதலீடு, வர்த்தகம் தொழிலியல் அமைச்சர் டத்தோஸ்ரீ ஜப்ருள் அப்துல் அஜிசின் அரசியல் செயலாளராகவும் அவர் பணியாற்றினார்.

இம்மாதம் 12ஆம் தேதி நடைபெற்ற மாநிலத் தேர்தலில் 56 இடங்களைக் கொண்டு மாநில சட்டமன்றத்தில் 34 இடங்களைப் பெற்று பக்கத்தான் ஹராப்பான் - பாரிசான் நேஷனல் கூட்டணி ஆட்சியைப் பிடித்தது.

# மூன்று மாநிலங்களைத் தற்காப்பதில் தேர்தல் இயந்திரமும் பேருதவி

**கிள்ளான்,** மாநிலத் தேர்தலில் பக்கத்தான் ஹராப்பான் மற்றும் பாரிசான் நேஷனல் கூட்டணி வெற்றி பெறுவதற்குத் தலைவர்களுக்கிடையிலான வலுவான கருத்திணக்கமே காரணமாக அமைந்துள்ளது.



தேர்தல் காலத்தில் தேர்தல் இயந்திரம் மேற்கொண்ட இடைவிடாத பிரச்சாரம் மற்றும் இன வேறு-பாடின்றி அனைத்து நிலையிலான மக்களும் வழங்கிய ஆதரவு ஆகியவையும் இந்த வெற்றிக்கு அடித்தளமாக அமைந்ததாக சிலாங்கூர் மாநில ஜசெக தலைவர் கோபிந்த் சிங் டியோ கூறினார்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்று ஹராப்பான் - பாரிசான் வெற்றியை முன்னிட்டு நேற்றிரவு இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

தங்கள் கட்சியைச் சேர்ந்த புதுமுக வேட்பாளர் அடைந்த வெற்றி பெருமிதம் அளிக்கும் வகையில் உள்ளதாக அமானா கட்சியின் சிலாங்கூர் மாநிலத் தலைவர் இஷாம் ஹஷிம் கூறினார்.

ஸ்ரீ செர்டாங் தொகுதியில் அபாஸ் அஸ்மி தாமான் டெம்ப்ளர் தொகுதியில் அன்ஃபால் சாஹரி, பத்து தீகா தொகுதியில் டேனியல் அல் ரஷிட் ஹருண், மேரு தொகுதியில் சித்தி மரியம் அப்துல் ரஷிட் ஆகியோர் பெற்ற வெற்றியை அவர் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே, மாநிலத்தில் கிடைத்த வெற்றியின் மூலம் தேசிய முன்னணி தனது செல்வாக்கை மீண்டும் வலுப்படுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளதாகச் சிலாங்கூர் மாநில அம்னோ துணைத் தலைவர் டத்தோ ஜோஹான் அப்துல் அஜிஸ் கூறினார்.

தேசிய முன்னணி எழுச்சி பெறுவதற்கான தொடக்கப் புள்ளியாக இது விளங்குகிறது. இதற்கு முன்னர் நாம் எதிர்க்கட்சியாக இருந்தோம். இந்த புதிய கூட்டணி புதிய வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர் சொன்னார்.

# வெ.10 லட்சம் வரை வருமானம் ஈட்ட - உதவும் பயிற்சித் திட்டம்



**ஷா ஆலம்,** மின்-வர்த்தகம் தொடர்பான பயிற்சிகளையும் வழிகாட்டுதலையும் வழங்கும் திட்டத்தை சீடேக் எனப்படும் சிலாங்கூர் மாநில தகவல் தொழில்நுட்ப மற்றும் இலக்கவியல் பொருளாதாரக் கழகம் அறிமுகப்படுத்துகிறது.

இந்த திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 நிறுவனங்கள் பங்கேற்கும் என்று அக்கழகத்தின் மின்-வர்த்தகப் பிரிவு நிர்வாகத் தலைவர் முகமது கைருள் இக்வான் முகமது செளஃபி கூறினார்.

உணவு, பானம் தயாரிப்பு, ஆடை வடிவமைப்பு, வாழ்க்கை முறை, ஒப்பனை, சுகாதாரம், கல்வி மற்றும் வீட்டு உள் வடிவமைப்பு உள்ளிட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் இந்த பயிற்சித் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் என்று அவர் சொன்னார்.

எஸ்.ஏ.பி. எனப்படும் சிலாங்கூர் பெமெச்சுட் திட்டத்தை விட இது மாறுபட்டதாக இருந்தது போலும் மூன்று மாத கால பயிற்சி உட்பட சில அம்சங்கள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கும். மின்-வர்த்தக தளங்கள் மூலம் தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் நிறுவனங்களை நாங்கள் இலக்காக கொண்டுள்ளது மட்டுமே இதில் வேறுபட்ட அம்சமாகும் என்றார் அவர்.

முதலீட்டாளர்களிடம் இருந்து நிதியை பெறும் அதேவேளையில் இதன் பங்கேற்பாளர்கள் பத்து லட்சம் வெள்ளி வரை வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும் தங்களின் தயாரிப்பு பொருட்களுக்கு பத்து லட்சம் ஆடர்கள் வரை பெறுவதற்கும் உதவுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

# வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி

**ஷா ஆலம்,** நேற்று முன்தினம் நடந்த மாநிலத் தேர்தலில் மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்கிய மக்களுக்கு வெற்றி பெற்ற வேட்பாளர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டதோடு மேலும் கடினமாக உழைக்கவும் தீர்மானித்துள்ளனர்.

தமக்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்கிய வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் தொகுதியின் மேம்பாட்டை தொடர்ந்து உறுதி செய்து வரப்போவதாக பாண்டன் இண்டா சட்டமன்ற உறுப்பினர் இஷாம் ஹாஷிம் கூறினார்.

இந்த தேர்தலில் நான் போட்டியை இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. முந்தைய ஐந்து ஆண்டுகளில் ஆற்றிய சேவைகளை மட்டுமே நம்பிருந்தேன். நல்ல பிரச்சார உத்தி மற்றும் ஒற்றுமை அரசின் ஆதரவுடன் பாண்டான் இண்டா மக்களுடன் தொடர்ந்து இணைந்திருப்பதற்குரிய வாய்ப்பினைப் பெற்றேன் என்று அவர் சொன்னார்.



இது ஒரு பெரிய சாதனை. இதனை வழங்கிய வாக்காளர்களுக்கு நன்றி. கொடுக்கப்பட்ட ஆணையை நான் வீணாக்க மாட்டேன். முன்பை விட சிறப்பாக எனது கடமைகளைச் செய்வேன் என்று சிலாங்கூர் கினி தொடர்பு கொண்ட போது அவர் கூறினார்.

இதற்கிடையில், இந்த வெற்றி குறித்து கருத்துரைத்த கின்ராரா தொகுதி உறுப்பினர் இங் ஸீ ஹான், பாகுபாடு இல்லாமல் அனைத்து குடியிருப்பாளர்களின் நலனுக்காகவும் வழக்கம் போல் பணியைத் தொடருவேன் என்றார்.

இந்த தேர்தலில் நான் மலேசியாவிலே அதிகப் பெரும்பான்மை வாக்குகளில் வெற்றி பெற்றேன். என்னைப் பொறுத்தவரை, அதிக பெரும்பான்மை பெறுவது என்பது மக்களின் நலனைப் பாதுகாப்பதில் அதிக பொறுப்பு உள்ளதை புலப்படுத்துகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

நான் சிறப்பான சேவையை வழங்குவேன், மேலும் கின்ராரா தொகுதியைத் தொடர்ந்து மேம்படுத்துவேன். இந்த வெற்றி எங்களின் புதிய நண்பர்களான அம்னோ மற்றும் பாரிசான் நேஷனல் ஆகியவற்றுடன் ஒற்றுமையாக இருந்ததன் விளைவாகும் என்று அவர் கூறினார்.

இதனிடையே, தேர்தல் முடிவு குறித்து கருத்துரைத்த சுங்கை ஆயர் தாவார் உறுப்பினர் டத்தோ ரிசாம் இஸ்மாயில், இந்த வெற்றி தனக்காக அல்ல என்றும் மாறாக அப்பகுதி மக்களுக்கு கிடைத்த பரிசு என்றும் விவரித்தார். அபிவிருத்தி மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் முன்பை விட செயல்திறனை மேம்படுத்த நான் உறுதியாக இருக்கிறேன் என்றார் அவர்.

பக்காத்தான் ஹராப்பான் மற்றும் பாரிசான் நேஷனல் ஆகிய கூட்டணிகள் அடங்கிய ஒற்றுமை அரசாங்கம் 56 இடங்களில் 34 இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் தனிப் பெரும்பான்மையுடன் சிலாங்கூரில் ஆட்சி அமைத்தது.

# தொழில் கல்வியை முடித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு




**செர்டாங்,** மனிதவள அமைச்சினால் வழங்கப்படும் திவேட் தொழில் திறன் கல்வியை முடித்த மாணவர்களில் 88.6 விழுக்காட்டினருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது என்று மனிதவள அமைச்சர் சிவகுமார் தெரிவித்தார்.

மனிதவள தொழில் கல்வியை முடிக்கும் பட்டதாரி மாணவர்களில் 34.7 விழுக்காட்டினர் முன் கூட்டியே வெற்றிகரமாக ஒரு வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

மேலும் ILJTM எனப்படும் தொழில் திறன் துறையில் தங்கள் படிப்பை முடித்து, மொத்தம் 70.8% மாணவர்கள் அதே துறையில் வேலை வாய்ப்பைப் பெற முடிந்ததுள்ளது என்று அவர் சொன்னார்.

ஆகவே திவேட் தொழில் கல்வி மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை அமைத்து கொடுத்துள்ளது.

படித்த கல்விக்கு ஏற்ற வகையில் வேலை கிடைப்பதால் தீவேட் இரண்டாம் தர கல்வியாக கருதாமல் மாணவர்கள் உற்சாகத்துடன் இந்த கல்வியைப் பயில முன் வரும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக இந்திய மாணவர்களும் தீவேட் தொழில் திறன் கல்வியைப் பயில அதிக வாய்ப்புகள் காத்திருக்கின்றன என்று அவர் சொன்னார்.

செர்டாங் Meaps மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 32 தொழில் திறன் கல்வி மையங்களில் தேர்ச்சி பெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் டிப்ளோமா பட்டம் பெற்றனர்

இந்த பட்டமளிப்பு விழாவுக்கு தலைமை ஏற்ற பின்னர் நிருபர்களிடம் பேசுகையில் மனிதவள அமைச்சர் சிவகுமார் இதனை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருட்களின் சந்தையை விரிவுபடுத்த எக்ஸ்போ 2023




**ஷா ஆலம்,** அடுத்த மாதம்: அக்டோபர் 6 முதல் 8 வரை நடைபெறும் சிலாங்கூர் பிசினஸ் எக்ஸ்போ 2023 (SELBIZ 2023) இல் பங்கேற்க சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகம் (PKNS) வர்த்தகர்களை அழைக்கிறது.

செத்தியா ஆலமில் உள்ள செத்தியா நகர மாநாட்டு மையத்தில் நடைபெறும் கண்காட்சியில் பங்கேற்கும் தொழில் முனைவோர் அல்லது பங்கேற்பாளர்களுக்கு மொத்தம் 200 வவுச்சர்கள் வழங்கப்படும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

“SELBIZ Expo 2023 இல் பங்கேற்க ஆர்வம் உள்ள கண்காட்சியாளர்கள் மற்றும் தொழில்முனைவோரை நாங்கள் தேடுகிறோம், PKNS பிஸ் கிளப் உறுப்பினர்களுக்கு RM2,000 மற்றும் RM2,500 (உறுப்பினர்கள் அல்லாதவர்கள்)வசூலிக்கப்படுகிறது.

உணவு, பானங்கள், ஃபேஷன், பாகங்கள், சில்லறை விற்பனை, சேவைகள், அழகுசாதனப் பொருட்கள், தொழில்நுட்பம், பயன்படுத்திய ஆடைகள், அலங்காரங்கள் மற்றும் குழந்தைப் பொருட்கள் போன்ற துறைகளில் உள்ள தொழில் முனைவோரை இந்த எக்ஸ்போவில் பங்கேற்க PKNS வரவேற்கிறது.

சிலாங்கூர் தொழில் முனைவோர் கிளினிக், காபி ஃபீஸ்டா, அதிர்ஷ்டக் குலுக்கல் மற்றும் செல்பிஸ் ரன் 2023 உள்ளிட்ட பல்வேறு சுவாரஸ்யமான செயல்பாடுகள் எக்ஸ்போவின் மூன்று நாட்களில் நடைபெறும்.

Tomok, Ernie Zakri, Amir Masdi, Floor 88 மற்றும் Ara Johari உள்ளிட்ட சில பிரபலமான கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

எக்ஸ்போ தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது கூடுதல் தகவலுக்கு, இஸ்ஸாட்டி நாடியா 017-419 9400 அல்லது நூர் சப்ரினா 011-2858 3903 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.



செந்தோசா தொகுதியில் சுதந்திர தின விழா



ஆகஸ்ட் 30, 2023 அன்று ஷா ஆலம் சுதந்திர அரங்கத்தில் மாநில அளவிலான 66வது தேசிய தினக் கொண்டாட்டத்தின் போது டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி பார்வையாளர்களுடன் கைகுலுக்கினார்.



ஆகஸ்ட் 30, 2023 அன்று ஷா ஆலம் சுதந்திர அரங்கத்தில் மாநில அளவில் 66வது தேசிய தினக் கொண்டாட்டத்தின் போது குழந்தைகள் மலேசியக் கொடியை அசைத்தனர்.



30 ஆகஸ்ட் 2023 அன்று ஷா ஆலம் சுதந்திர அரங்கத்தில் மாநில அளவில் நடைபெற்ற 66வது தேசிய தினக் கொண்டாட்டத்தில், மக்கள் 'மெர்டேகா' என கோஷமிட்டார்




கோல சிலாங்கூரில் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் சுதந்திர தின கொண்டாட்டம்



ஆகஸ்ட் 30, 2023 அன்று ஷா ஆலம் சுதந்திர அரங்கத்தில் மாநில அளவில் 66வது தேசிய தினக் கொண்டாட்டத்தின் போது வானவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது

**இங் சீ ஹான் (52)**

**முதலீடு,வர்த்தகம் மற்றும் போக்குவரத்து துறை பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- முதலீடு மற்றும் வர்த்தகம்
- SMI வளர்ச்சி மற்றும் புது பொருளாதார பகுதிகள்
- சிலாங்கூர் போக்குவரத்து
- சிலாங்கூர் மாநில இந்துக்கள், சீக்கியர்கள் பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் தாவோயிஸ்டுகள் (LIMAS) ஆகிய சமயங்களுக்கு சிறப்புக் குழுவின் இணைத் தலைவர்

**கல்வி**

- டிரைன் பல்கலைக்கழக மின் பொறியியல் இளங்கலை இந்தியானா, அமெரிக்கா

**அரசியல் ஈடுபாடு**

- உள்ளூர் அரசு எஸ்கோ, பொது போக்குவரத்து மற்றும் புதுய கிராம மேம்பாடு **(2018-2023)**
- கின்றாரா மாநில சட்டமன்ற உறுப்பினர் **(2013-தற்போது)**
- தேசிய டிஏபி உதவி பொருளாளர் **(2022-தற்போது)**
- சிலாங்கூர் டிஏபி செயலாளர் **(2021-தற்போது)**

**தொழில்/சமூக ஈடுபாடு**

- **Augier SA** இன் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் மேலாளர்

**இஷாம் ஹாசிம் (61)**

**உள்கட்டமைப்பு மற்றும் விவசாயப் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- உள்கட்டமைப்பு முன்னேற்றம்
- விவசாய மற்றும் தோட்டங்களை நவீனமயமாக்கல்

**கல்வி**

- முதுகலை வணிக நிர்வாகம், மலாயா பல்கலைக்கழகம்
- சிவில் இன்ஜினியரிங் இளங்கலை, நியூகேஸில் அபான் டைன் பல்கலைக்கழகம்

**அரசியல் ஈடுபாடு**

- உள்கட்டமைப்பு மற்றும் விவசாயம் எஸ்கோ **(2018-2023)**
- பண்டான் இண்டா மாநில சட்டமன்ற உறுப்பினர் **(2018-தற்போது)**
- ஷா ஆலம் மாநகராட்சி உறுப்பினர் **(2008-2018)**
- அமானா தேசிய பொருளாளர் கட்சியின் **(2022-தற்போது)**
- சிலாங்கூர் அமானா தலைவர் **(2022-தற்போது)**

**தொழில்/சமூக ஈடுபாடு**

- சிலாங்கூர் நீர் மேலாண்மை வாரியத்தின் உறுப்பினர்
- சிலாங்கூர் விவசாய மேம்பாட்டு கழகத்தின் இயக்குநர்கள் குழு
- உறுப்பினர்
- **``Landasan Lumayan Sdn Bhd``** இன் இயக்குநர்கள் குழு உறுப்பினர்
- தெனாகா நேஷனல் பொறியாளர்

**போர்ஹான் அமன் ஷா (61)**

**வீட்டுவசதி மற்றும் கலாச்சாரப் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- வீட்டுவசதி மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சி
- மலாய் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியம்

**கல்வி**

- வணிக நிர்வாகத்தில் டிப்ளோமா

**அரசியல் ஈடுபாடு**

- கிராமப்புற வளர்ச்சி, பாரம்பரிய கிராமங்களின், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய எஸ்கோ **(2020-2023)**
- தஞ்சோங் சிப்பாட் மாநில சட்டமன்ற உறுப்பினர் **(2018-தற்போது)**
- டத்தோ மந்திரி புசாரின் அரசியல் செயலாளர் **(2018-2020)**
- சிலாங்கூர் மாநில ஹராப்பான் செயலாளர் **(2018-2022)**
- சிலாங்கூர் மாநில கெஅடிலான் தலைமைத்துவ குழுவின் துணைத் தலைவர் **(2022-தற்போது)**
- சிலாங்கூர் மாநில கெ அடிலான் தலைமைத்துவ குழு உதவித் தலைவர் **(2018-2022)**
- சிலாங்கூர் மாநில கெஅடிலான் தலைமைக் குழுவின் செயலாளர் **(2014-2018)**
- சிப்பாங் கெஅடிலான் தொகுதி தலைவர் **(2010-தற்போது)**

**இங் சுவி லிம் (53)**

**உள்ளூர் அரசு மற்றும் சுற்றுலா துறை பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- உள்ளூர் அரசாங்க வளர்ச்சி
- சுற்றுலா
- புதிய கிராம வளர்ச்சி
- சிலாங்கூர் மாநில பௌத்தம், கிறிஸ்தவம் இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் தாவோயிஸ்டுகள் (LIMAS) ஆகிய சமயங்களுக்கு சிறப்புக் குழுவின் இணைத் தலைவர்

**கல்வி**

- கிள்ளான் தேசிய உயர்நிலைப் பள்ளி

**அரசியல் ஈடுபாடு**

- சிலாங்கூர் மாநில சட்டசபையின் சபாநாயகர் (2018-2023)
- சிகிஞ்சான் மாநில சட்டமன்ற உறுப்பினர் (2004-தற்போது)
- சிலாங்கூர் டிஏபி துணைத் தலைவர் (2021-தற்போது)
- சிலாங்கூர் டிஏபி அமைப்பு செயலாளர் (2015-2017)

**டத்தோ ரிஸாம் இஸ்மாயில் (42)**

**புறநகர் வளர்ச்சி மற்றும் ஒற்றுமை துறையின் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**

- புறநகர் மற்றும் கிராமப்புற வளர்ச்சி
- பாரம்பரிய கிராமங்களின் நிலைத்தன்மை
- தேசிய ஒற்றுமை

**கல்வி**

- அரசியல் அறிவியல் இளங்கலை, லிங்கன் பல்கலைக்கழகக் கல்லூரி

**அரசியல் ஈடுபாடு**

- சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் (2018-2023)
- சுங்கை ஆயர் தாவார் மாநில சட்டமன்ற உறுப்பினர் (2018-தற்போது)
- நிதி அமைச்சரின் அரசியல் செயலாளர் (2021-2022)
- அம்னோவின் உச்ச மன்றத்தின் உறுப்பினர் (2020-தற்போது)
- சிலாங்கூர் அம்னோ இளைஞர் தலைவர் (2018-தற்போது)
- சபாக் பெர்ணம் அம்னோ தலைவர் (2023 முதல்)



**முகமட் நஜ்வான் ஹலிமி (38)**
**இளைஞர்கள், விளையாட்டு மற்றும் தொழில் முனைவோர் ஆட்சிக்குழு துறையின் பொறுப்பு உறுப்பினர்**



- இளைஞர்களின் வளர்ச்சி மற்றும் விளையாட்டு முன்னேற்றம்
- தொழில் முனைவோர் மற்றும் ஆக்கப்பூர்வமான பொருளாதாரத்தை மேம்படுத்துதல்
- பேரிடர் மேலாண்மை

**கல்வி**
- முதுகலை வணிக நிர்வாகம், புத்ரா மலேசியா பல்கலைக்கழகம்
- மெக்கானிக்கல் இன்ஜினியரிங் இளங்கலை, தேசிய தெனாகா பல்கலைக்கழகம்

**அரசியல் ஈடுபாடு**
- கோத்தா அங்கெரிக் மாநில சட்டமன்ற உறுப்பினர் (2018-தற்போது)
- சிலாங்கூர் கெ அடிலான் இளைஞர் குழுவின் தலைவர் (2019-2021)
- ஷா ஆலம் தொகுதி கெ அடிலான் துணைத் தலைவர் (2022-தற்போது)

**தொழில்/சமூக ஈடுபாடு**
- சிலாங்கூர் விளையாட்டு கவுன்சிலின் துணை இயக்குனர்
- நிர்வாக மற்றும் இராஜதந்திர அதிகாரி
- பொறியாளர்

**ஜமாலியா ஜமாலுதீன் (34)**
**பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- பொது சுகாதாரம்
- சுற்றுச்சூழல், வானிலை மாற்றம் மற்றும் பசுமை தொழில்நுட்பம்

**கல்வி**
- வணிகம், நிர்வாகம் மற்றும் மேலாண்மை இளங்கலை, நோர்வூட் பல்கலைக்கழகம், அமெரிக்கா

**அரசியல் ஈடுபாடு**
- பண்டார் உத்தாமா மாநில சட்டமன்ற உறுப்பினர் (2018-தற்போது)
- பெட்டாலிங் ஜெயா நகர சபை உறுப்பினர் (2016-2018)
- சிலாங்கூர் டிஏபி உதவிச் செயலாளர் (2021-தற்போது)
- சிலாங்கூர் டிஏபி நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் (2018-தற்போது)

**தொழில்/சமூக ஈடுபாடு**
- டமன்சாரா உத்தாமா மாநில சட்டமன்ற உறுப்பினரின் சிறப்பு அதிகாரி
- Ratera & Van Galen Sdn Bhd இன் கணக்கு மேலாளர்

**பாப்பா ராய்டு வீரமன் (48)**
**மனித வளங்கள் மற்றும் வறுமை ஒழிப்பு துறையின் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- மனித வளம்
- வறுமை ஒழிப்பு
- பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் விவகாரங்கள்
- சிலாங்கூர் மாநில பௌத்தம், கிறிஸ்தவம், இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் தாவோயிஸ்டுகள் (LIMAS) ஆகிய சமயங்களுக்கு சிறப்புக் குழுவின் இணைத் தலைவர்

**கல்வி**
- லிபெரல் கல்வி இளங்கலை, பொது வாவசான் பல்கலைக்கழகம்

**அரசியல் ஈடுபாடு**
- பந்திங் மாநில சட்டமன்ற உறுப்பினர் (2023 முதல்)
- ஷா ஆலம் நகர சபை உறுப்பினர் (2008-2010 மற்றும் 2013-2023)
- சிலாங்கூர் டிஏபி துணைச் செயலாளர் (2021-தற்போது)
- தாமான் ஸ்ரீ முடா டிஏபி கிளைத் தலைவர் (2006-தற்போது)

**தொழில்/சமூக ஈடுபாடு**
- வீரமன் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவன இயக்குனர்

**டாக்டர் முகமட் பாஹ்மி ஙா (49)**
**இஸ்லாமிய மதம் மற்றும் புதுமை துறையின் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**



- இஸ்லாமிய மத விவகாரங்கள்
- ஹலால் தொழில்
- டிஜிட்டல் உள்கட்டமைப்பு

**கல்வி**
- ஏரோநாட்டிக்ஸ் பிஎச்டி, இம்பீரியல் கல்லூரி, லண்டன்

**அரசியல் ஈடுபாடு**
- ஸ்ரீ செத்தியா மாநில சட்டமன்ற உறுப்பினர் (2023 முதல்)
- கெ அடிலான் உச்ச மன்ற குழு உறுப்பினர் (2022-தற்போது)

**தொழில்/சமூக ஈடுபாடு**
- சிலாங்கூர் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர், சிலாங்கூர் மந்திரி புசார் (கட்டமைப்பு) அல்லது எம்பிஐ
- CIMB முதலீட்டு வங்கியின் அதிகாரி
- இங்கிலாந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மன்ற விஞ்ஞானி

**அன்ஃபால் ஷாரி (44)**
**பெண்கள் மேம்பாட்டு மற்றும் சமூக நலன் துறை பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர்**

- பெண்கள் மற்றும் குடும்பங்களின் அதிகாரம்
- சமூக நலன்
- பொருளாதாரப் பராமரிப்பு

**கல்வி**
- வியாபார நிர்வாகம், இளங்கலை, நோர்தம்ப்ரியா பல்கலைக்கழகம், நியூகேஸ்டல்

**அரசியல் ஈடுபாடு**
- தாமான் டெம்ப்ளர் மாநில சட்டமன்ற உறுப்பினர் (2023)
- அம்பாங் ஜெயா நகராண்மை கழக உறுப்பினர் (2021-2023)
- தேசிய ஹராப்பான் கூட்டணி உதவித் தலைவி (2022-தற்போது வரை)
- அமானா மகளிர் அணி துணை தலைவர் (AWAN) (2019-தற்போது)

**தொழில்/சமூக ஈடுபாடு**
- கோத்தா ராஜா எம்பியின் உதவி அதிகாரி
- ``MAIWP`` ஹெல்த்கேரின் இயக்குநர்கள் குழு உறுப்பினர்



# வெள்ளப் பகுதிகளில் வடிகால் முறை தரம் உயர்த்தப்படும்



**ஷா ஆலம்,** கனத்த மழையின் போது வெள்ளப் பிரச்சனையை எதிர்நோக்கும் உலு லங்காட் 16,17 மற்றும் 18 வது மைலில் வடிகால் முறையைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை தாம் துரிதப்படுத்த உள்ளதாக டுசுன் துவா சட்டமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

இப்பகுதிகளில் வெள்ளப் பிரச்சனை கடுமையானதாக உள்ளதாகக் கூறிய டத்தோ ஜோஹான் அப்துல் அஜிஸ், இவ்விவகாரத்தை தாம் காஜாங் நகராண்மைக் கழகத்தின் பொறியியல் பிரிவு மற்றும் பொதுப்பணித் துறையின் கவனத்திற்கு கொண்டுச் சென்றுள்ளதாக குறிப்பிட்டார்.

ஒரு மணி நேரத்திற்கு மழை கடுமையாகப் பெய்தால் கூட இப்பகுதியில் வெள்ளம் ஏற்பட்டு விடுகிறது. இந்த வெள்ளப் பிரச்சனைக்கு காரணமாக இருக்கும் வடிகால் முறையைத் தரம் உயர்த்துவதற்கு நான் கோரியுள்ளேன் என்றார் அவர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தாம் நேற்று நேரில் சென்று பார்வையிட்ட தாகக் கூறிய அவர், இந்த பிரச்சனை தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க முடியாது என்பதால் தீர்வுக்கான நடவடிக்கைளைத் தாம் விரைந்து எடுக்கவுள்ளதாகச் சொன்னார்.

நேற்று இங்கு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதான கால்வாய் போதுமான அளவு அகலத்தைக் கொண்டிராதது இந்த வெள்ளப் பிரச்சனைக்கு காரணமாக உள்ளது கண்றியப்பட்டுள்ள நிலையில் இவ்விவகாரம் பொதுப்பணித் துறை மற்றும் காஜாங் நகராண்மைக் கழகத்தின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளது என்றார்.

# பிளாஸ்டிக் பைகள் இல்லா பிரச்சாரத்திற்கு ஆதரவு

**ஷா ஆலம்,** பிளாஸ்டிக் பைகள் இல்லா பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் உலு சிலாங்கூர் நகராண்மை கழகம் (எம்பிஎச்எஸ்) அதன் நிர்வாகப் பகுதியில் உள்ள மக்களை மீண்டும் பயன்படுத்தக்கூடிய பைகளைக் கொண்டு வர ஊக்குவிக்கிறது.

2025 ஆம் ஆண்டளவில் நாடு முழுவதும் உள்ள அனைத்து வளாகங்களிலும் வணிகத் துறைகளிலும் பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டைஅகற்றுவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்திற்கான ஆதரவின் அடையாளமாக இந்த திட்டம் இருப்பதாக உலு சிலாங்கூர் நகராண்மை கழகம் தெரிவித்துள்ளது.

கோலா குபு பாரு நகரைச் சுற்றியுள்ள பல கடைகள் முன் காட்சி படுத்துவதற்காக பிளாஸ்டிக் பையில்லா பிரச்சார ஸ்டிக்கர்களை எம்பிஎச்எஸ்யின் தலைவர் முகமட் ஹஸ்ரி நோர் முகமட் வழங்கினார்.

எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை ஆதரிக்கும் மற்றும் தொடர்வதற்கான அடையாளமாக உள்ளது, என்று எம்பிஎச்எஸ்யின் முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பிளாஸ்டிக் பை மற்றும் பாலீஸ்டிரின் இல்லாப் பிரச்சாரம் ஆகஸ்ட் 19 அன்று கோலா குபு பாருவில் உள்ள உலு சிலாங்கூர் மாவட்டத்தில் நடைபெற்ற வாகன இல்லா தினத்தில் தொடங்கப்பட்டது.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கழிவு மாசுபாட்டைக் கையாள்வதில் அரசாங்கம் கொண்டுள்ள கொள்கையை வலியுறுத்தும் விதமாக இந்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. நாட்டில் தூய்மையை போற்றும் நீண்ட கால திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.






# 10,000 தேசியக் கொடிகள் விநியோகம்

**பெட்டாலிங் ஜெயா,** பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றம் தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக வளாகங்களுக்கு 10,000க்கும் மேற்பட்ட தேசியக் கொடிகளை விநியோகிக்கிறது.

நாட்டின் 66வது தேசிய தினக் கொண்டாட்டத்திற்கு மெருகு-கூட்டும் நோக்கிலான இந்த கொடி வழங்கும் திட்டம் இரு வாரங்களுக்கு முன்னரே தொடங்கப்பட்டு விட்டதாக டத்தோ பண்டார் முகமது அஸ்ஹான் முகமது அமிர் கூறினார்.

இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தேசியக் கொடிகள் மாநகர் மன்றத்தின் லைசென்ஸ் பெற்ற வணிக வளாகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

கடைகளில் வரிசையாக அணிவகுத்து பட்டொளி வீசிப் பறக்கும் தேசியக் கொடிகளால் இந்த சுதந்திர மாதம் முழுவதும் பெட்டாலிங் ஜெயா வண்ணமயாக ஜொலிக்க வேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகும்.

நாம் நேசிக்கும் நாட்டின் மீது நாம் காட்டும் அன்பை பிரதிபலிக்கும் விதமாகவும் இந்த கொடி வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

அதோடு மட்டுமின்றி தேசிய தினத்தை குதூகலமாக்கவும் தாய் நாட்டின் மீதான பற்றுதலை மக்கள் மத்தியில் விதைக்கவும் மாநகர் மன்றம் 40 அடி அகலம் மற்றும் 160 அடி நீளம் கொண்ட இரு ராட்சத கொடிகளை மெனாரா எம்.பி.பி.ஜே. தலைமையகத்தில் பறக்கவிடும் என்றும் அவர் சொன்னார்.

# டாருல் எஹ்சான் வணிக நிதி திட்டத்தின் மூலம் - சிறு தொழில்




**ஷா ஆலம்,** டாருல் எஹ்சான் வணிக நிதித் திட்டத்தின் (நாடி) மூலம் சிறு தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களுக்கு யாயாசன் ஹிஜ்ரா சிலாங்கூர் (ஹிஜ்ரா) RM5,000 வரை வழங்குகிறது.

இந்த மூலதன நிதியுதவி அனைத்து வணிகத் துறைகளுக்கும் மற்றும் சிலாங்கூர் மக்களுக்கும் வழங்கப்படும். மேலும், இந்த நிதி திட்டத்திற்கு பெண்கள் கூட விண்ணப்பிக்க ஊக்குவிக்கப் படுகிறார்கள் என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

"இந்த திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகளில் ஒன்று விண்ணப்பதாரர்கள் 18 முதல் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் மற்றும் சிலாங்கூரில் வாக்களிப்பவர்களாக இருத்தல் வேண்டும். இத்திட்டத்திற்கு அதிகமான பெண்கள் விண்ணப்பித்தால் சிறப்பாக இருக்கும்," என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இணையத்தில் விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள், **http://mikrokredit.selangor.gov.my/** ஐப் பார்வையிடவும் அல்லது உங்களுக்கு அருகிலுள்ள 19 ஹிஜ்ரா கிளைகளைத் தொடர்பு கொள்ளவும்.

நாடியைத் தவிர்த்து ஐ-பிசினஸ், ஐ-பெர்மூஸிம், ஹீரோ டூ ஹீரோ, நியாகா டாருள் ஏசான் (நாடி) கோ டிஜிட்டல், ஐ-லெஸ்தாரி மற்றும் ஐஅக்ரோ ஆகிய வர்த்தக கடனுதவித் திட்டங்களையும் ஹிஜ்ரா அறிமுகப்படுத்தியுள்ளது.

# காப்பார் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி



சிலாங்கூரில் இந்தியர்கள் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கும் பட்டணங்களில் ஒன்று காப்பார். கிள்ளானிலிருந்து கோல சிலாங்கூர் செல்லும் சாலையின் 16வது கிலோ மீட்டரில் இந்த பட்டணம் அமைந்துள்ளது.

சுற்றிலும் தோட்டங்கள் சூழ்ந்திருக்க, அமைதியான சூழலில் வீற்றிருந்த இந்த பட்டணம் தற்போது வளர்ச்சியின் கரங்கள் பட்டு பரபரப்பான நகரமாக மாறிவிட்டது. சுற்றியுள்ள தோட்டங்களும் வீடமைப்பு பகுதிகளாகவும் தொழிற்பேட்டை களாகவும் உருமாறி விட்டது.

நாகரீக காற்றின் தாக்கம் பட்டு இடங்கள் உரு மாறினாலும் தமிழர்களின் வாழ்வியல் அடையாளத்தைச் உரக்கச் சொல்லும் இரு விஷயங்கள் இன்னும் தடம் மாறாமலும் நிலை மாறாமலும் அப்படியே இருக்கின்றன. அவற்றில் ஒன்று ஆலயம். மற்றொன்று தமிழ்ப்பள்ளி.

காப்பார் நகரில் குடியிருப்பு பகுதிக்கு மத்தியில் சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் மூன்று மாடிக் கட்டிடத் தொகுதியாக கம்பீரமாக வீற்றிருக்கிறது காப்பார் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி.

## ஆங்கிலப் பள்ளி தமிழ்ப்பள்ளியாக மாறியது

இப்பள்ளி எண்பது ஆண்டுகளுக்கு மேல் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது. 1940ஆம் ஆண்டு தேவாலயத்தினரால் 20 மாணவர்களுடன் இப்பள்ளி தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில் இப்பள்ளியில் பாடங்கள் ஆங்கில மொழியில்தான் போதிக்கப்பட்டு வந்தன.

ஜப்பானியரின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு தங்களுக்கு தமிழ்ப்பள்ளி வேண்டும் என்ற உணர்வு வட்டார மக்களிடையே மேலோங்கியது. இந்த நோக்கத்திற்காக மக்கள் நடத்திய போராட்டம் பலன் தந்தது. ஆங்கிலப் பள்ளி தமிழ் பள்ளியாக மாற்றம் கண்டது. மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்வு கண்டது.

ஆங்கிலப் பள்ளியை தமிழ்ப்பள்ளியாக மாற்றுவதற்கு வித்திட்ட நமது முன்னோர்களான வீ. மூக்கன், கருப்பையா பிள்ளை, முனுசாமி, வீரையா பிள்ளை, திருவேங்கடம் ஆகியோர் என்றும் போற்றதலுக்குரியவர்களாக விளங்குகின்றனர்.

கடந்த 1951ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி முதல் இப்பள்ளி அரசாங்கத்தின் முழு உதவியுடன் செயல்படத் தொடங்கியது. அக்காலக்கட்டத்தில் இப்பள்ளியில் காலையில் தமிழ் மொழியிலும் மாலையில் ஆங்கில மொழியிலும் பாடங்கள் நடத்தப்பட்டு வந்தன.

## 25 ஆண்டுகள் போராட்டம்

இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்ததை தொடர்ந்து புதிய கட்டிடத்திற்கான தேவையும் ஏற்பட்டது. புதிய பள்ளியைப் பெறுவதற்கு சுமார் 25 ஆண்டு காலம் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு இறுதியாக வெற்றி கிட்டியது. கடந்த 2004 ஆம் ஆண்டில் மூன்று மாடிகள்
கொண்ட புதிய கட்டிடம் கட்டப்பட்டு காலை, மாலை என இரு பிரிவுகளாக வகுப்புகள் நடத்தப்பட்டன.

தற்போது இப்பள்ளி தலைமையாசிரியர் மு.செல்வநாதன் தலைமையில் சுமார் 700 மாணவர்கள் மற்றும் 45 ஆசிரியர்களுடன் மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளி கல்வியில் சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்து வருவதோடு புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குவதாக கடந்த 2021ஆம் ஆண்டு பள்ளியின் தலைமையாசிரியராக பணியாற்றி வரும் செல்வநாதன் குறிப்பிட்டார்.

## தகவல் தொழில்நுட்பத் துறையில் அபார செயல்பாடு

மொத்தம் 24 வகுப்பறைகளைக் கொண்ட இப்பள்ளியில் திடல், நூலகம், அறிவியல் கூடம், நலவியல் அறை, வாழ்வியல் கல்விப் பட்டறை, கலை கல்வி, பள்ளி மண்டபம், கூட்ட அறை, வழிபாட்டு அறை, சிற்றுண்டிச் சாலை, பரிகார போதனை அறை உள்ளிட்ட வசதிகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

புத்தாக்கத் துறையில் மற்ற பள்ளி மாணவர்களுக்கு தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி இடைவிடாது சாதனைகளை புரிந்து வருவதாக அவர் சொன்னார்.

## தேசிய விளையாட்டு போட்டிகளில் தங்கம் வென்றவர்கள்

இந்த பள்ளியின் சாதனைகள் யாவும் மாணவர்களின் எண்ணத்தில் உதித்து ஆசிரியர்களின் முயற்சியில் உருவானவை ஆகும். தகவல் தொழில்நுட்பத் துறையில் இப்பள்ளி அபாரமாக செயல்பட்டு வருவதோடு கற்றல், கற்பித்தல் சிறப்பான முறையில் நடை பெறுவதற்கு ஏதுவாக அனைத்து வகுப்புகளும் விவேகத் தொலைக்காட்சியைக் கொண்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையை பொறுத்தவரை 2007, 2010 ஆம் ஆண்டு சிலாங்கூர் தமிழ் பள்ளிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி, 2008/2022 தேசிய அளவிலான குறுக்கோட்டப் போட்டியில் தங்கப்பதக்கத்தை இப்பள்ளி மாணவர்கள் வென்றுள்ளனர்.

இது தவிர, 2009 ஆம் ஆண்டு மாநில நிலையிலான இளம் ஆய்வாளர் அறிவியல் விழாவில் முதல் நிலையிலும் 2009ஆம் ஆண்டு தேசிய நிலையிலான மும்மொழி பேச்சுப் போட்டியில் இரண்டாம் நிலையிலும் மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

## இங்கிலாந்து மென்செஸ்டர் சிட்டியில் கால்பந்து பயிற்சி

கடந்த 2010ஆம் ஆண்டு ஓம்ஸ் தியாகராஜன் அறவாரியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற "ரோட்டு இங்கிலாந்து" போட்டியில் முதல் நிலை வெற்றியாளராக வாகை சூடியதைத் தொடர்ந்து ஒரு ஆசிரியரும் ஐந்து மாணவர்களும் மென்செஸ்டர் சிட்டியில் இரண்டு வாரம் கால்பந்து பயிற்சியை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றனர்.

மேலும், தகவல் தொடர்பு தொழில்நுட்பப் புதிர்ப் போட்டி, மும்மொழிப் பேச்சுப் போட்டி, தேசிய அளவிலான கராத்தே போட்டி, தேசிய அளவிலான சதுரங்கப் போட்டி, தேசிய நிலையிலான குறுக்கோட்டப் போட்டி, மாவட்ட நிலையிலான கபடி போட்டி ஆகியவற்றிலும் இம்மாணவர்கள் பங்கேற்று சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

காப்பார் மெதடிஸ்ட் பள்ளியின் சாதனைகள் இத்துடன் முற்றுப் பெறவில்லை. அவற்றை வரிசைப்படுத்தினால் பட்டியல் நீண்டு கொண்டே போகும். இப்பள்ளி மாணவர்களின் இவ் வெற்றிக்கு துணைத் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம், பள்ளி மேலாளர் வாரியம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பொருளாதார ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் வழங்கி வரும் அளப்பரிய பங்களிப்பும் முக்கிய காரணமாகும் என்றும் செல்வநாதன் குறிப்பிட்டார்

**செய்தி : ரா. ராஜா**

**SELANGOR INDRU**

Sidang pengarang

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A.Pakiyanathan

**PENOLONG PENGARANG**
Rajah Ramaya

**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan

**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**

*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*

## மாநிலத் தேர்தல் - வாக்காளர்களுக்கு பிரதமர் நன்றி



**கோலாலம்பூர்,** ஆறு மாநிலங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் தங்களது ஜனநாயகக் கடமையை முறையாக நிறைவேற்றியதற்காக அனைத்து வாக்காளர்களுக்கும் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நன்றி தெரிவித்துள்ளார். ஒற்றுமை அரசுக்கு அளிக்கப்படும் ஆதரவை தொடர்ந்து போற்றுவேன் என்று பக்காத்தான் ஹராப்பான் தலைவருமான அவர் சொன்னார். சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பினாங்கு, கிளந்தான், திரங்கானு மற்றும் கெடாவில் உள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றி. நான் அதை பாராட்டுகிறேன். உங்கள் ஆதரவை மறக்க மாட்டேன் என்று அவர் தனது முகநூல் பதிவில் தெரிவித்தார். இந்த தேர்தலில் பக்கத்தான் ஹராப்பான் மற்றும் பாரிசான் நேஷனல் கூட்டணியை உள்ளடக்கிய ஒற்றுமை அரசாங்கம் சிலாங்கூர், நெகிரி செம்பிலான் மற்றும் பினாங்கில் வெற்றி பெற்றது. பெரிக்காத்தான் நேஷனல் கிளந்தான், கெடா மற்றும் திரங்கானுவை கைப்பற்றியது.

## பொது கழிப்பறைகள் தரம் உயர்த்தப்படும்



**ஷா ஆலம்,** கிள்ளான் நகரம் விரைவில் மாநகர அந்தஸ்தைப் பெறவுள்ளதை முன்னிட்டு நகரின் தோற்றத்தை உயர்த்தும் வகையில் மார்க்கெட் மற்றும் பொது கழிப்பறைகளை தரம் உயரத்துவது உள்ளிட்ட 21 திட்டங்களை கிள்ளான் நகராண்மைக் கழகம் மேற்கொள்ளவுள்ளது.

இத்திட்டங்களை மேற்கொள்வதற்கு தேவையான 50 லட்சம் வெள்ளி மானியத்திற்கு ஊராட்சி மன்ற மேம்பாட்டு அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில் மேம்பாட்டுப் பணிகள் அடுத்தாண்டு தொடங்கப்படும் என்று நகராண்மைக் கழகத் தலைவர் நோராய்னி ரோஸ்லான் கூறினார்.

இந்த முன்னெடுப்பின் வாயிலாக கோலக் கிள்ளானிலுள்ள பெரிய மார்க்கெட் 10 லட்சம் வெள்ளி செலவிலும் ஜாலான் கெராத்தாப்பி லாமா பகுதி 10 லட்சம் வெள்ளி செலவிலும் ஜம்பத்தான் கோத்தா பாலத்தில் பாதசாரிகள் மற்றும் சைக்கிளோட்டிகளுக்கான தடம் 690,000 வெள்ளி செலவிலும் தரம் உயர்த்தப்படும் என அவர் சொன்னார்.

இவை தவிர்த்து பட்டர்ஃபிளாய் பார்க் விளையாட்டு பூங்கா மற்றும் புக்கிட் திங்கியில் உள்ள திடல், வலைப்பந்து திடல், பொழுது போக்கு சாதனங்கள் மற்றும் கார் நிறுத்துமிடம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு 396,460 வெள்ளி செலவிடப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பெங்காலான் பத்து தாமான் அவாமில் சுத்தமான, நறுமணமிக்க மற்றும் வசீகரிக்கக்கூடிய தரத்திலான கழிப்பறை 220,000 வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்படும். அதோடு மட்டுமின்றி 380,000 வெள்ளி செலவில் கிள்ளானிலுள்ள பொது கழிப்பறைகள் சீரமைக்கப்படவுள்ளதோடு 13 லட்சம் வெள்ளி செலவில் பல்வேறு சிறு திட்டங்களும் அமலாக்கம் காணவுள்ளன என்றார் அவர்.

கிள்ளான் நகராண்மைக் கழகத்தின் 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் பொது மக்களின் கருத்தைப் பெறுவதற்காக கடந்த ஞாயிற்றுக் கிழமை இங்குள்ள கே.எஸ்.எல். எக்ஸ்பிலேனேட் ஹோட்டலில் நடத்தப்பட்ட கலந்தாய்வு நிகழ்வில் இத்திட்டங்கள் தொடர்பான கருத்துகள் முன்வைக்கப்பட்டதாக நோராய்னி சொன்னார்.

## ஜெலாஜா ஜோப்கேர் - பெட்டாலிங் மாவட்டத்தில் தொடரும்



**ஷா ஆலம்,** சிலாங்கூர் ஊழியர் அதிகாரமளிக்கும் பிரிவு (UPPS) ஏற்பாடு செய்துள்ள ஜெலாஜா ஜோப்கேரின் இரண்டாவது தொடர் ஆகஸ்ட் 26 ஆம் தேதி பெட்டாலிங் மாவட்டத்தில் தொடங்குகிறது. இத்திட்டத்தில் சிலாங்கூர் மக்களுக்காகப் பல்வேறு துறைகளில் இருந்து 20 நிறுவனங்கள் பங்கேற்க உள்ளனர் என தலைமை ஒருங்கிணைப்பாளர் விஜயன் சுப்ரமணியம் கூறினார்.

"முன்னதாக பெறப்பட்ட பொது மக்களின் நேர்மறையான கருத்துக்களைத் தொடர்ந்து இந்த இரண்டாவது தொடர் நடத்தப்படுகிறது மற்றும் ஒன்பது மாவட்டங்களில் இந்த திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நாங்கள் ஜூலை 22 ஆம் தேதி இந்த நிகழ்வை ஏற்பாடு செய்ய திட்டமிட்டோம், ஆனால் மாநிலத் தேர்தல் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.

"மேலும் விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உதவியுடன் வேலை கிடைக்க நாங்கள் உதவுவோம்," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

இதற்கிடையில், இந்த சனிக்கிழமை அன்று பெட்டாலிங் ஜெயாவில் உள்ள பாதுகாப்பு ஓட்டுநர் மையத்தில், "UPPS" பாதுகாப்பான ஓட்டுநர் பயிற்சியை ஏற்பாடு செய்யும் என்று விஜயன் தெரிவித்தார், இதில் 100 பி-பங்கிலான் தொழிலாளர்கள் கலந்துகொள்வார்கள்.

"மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் சம்பந்தப்பட்ட பல விபத்துக்கள் நடப்பதை நாங்கள் கண்டறிந்தோம். சாலையில் பாதுகாப்பைப் பேணுவதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த நோக்கத்தில் இந்த நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் வழி, மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் மிகவும் கவனமாக இருப்பதோடு, சாலை விபத்துகளின் விகிதத்தையும் குறைக்க முடியும்," என்று அவர் கூறினார்.

## 50,000 வருகையாளர்களுக்கு இலக்கு



**ஷா ஆலம்,** சிலாங்கூர் சர்வதேச வணிக உச்சி மாநாடு (SIBS) 2023 கோலாலம்பூர் மாநாட்டு மையத்தில் அக்டோபர் 19 முதல் 22 வரை நடைபெறும்.

இன்வெஸ்ட் சிலாங்கூர் பெர்ஹாட் (இன்வெஸ்ட் சிலாங்கூர்) இன் தலைமை நிர்வாக இயக்குனர் கூறுகையில், இந்த திட்டம் 1,057 கண்காட்சி யாளர்களை வழங்கவுள்ளது, இதில் 20 சதவீத சர்வதேச கண்காட்சியாளர் பங்கேற்புக்கு இலக்கு உள்ளது.

"இதுவரை 72 சதவீத கண்காட்சி இடத்தை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் வாங்கியுள்ளன. நிகழ்ச்சி தொடங்கும் முன் அனைத்து கண்காட்சி இடங்களும் முழுமையாக விற்று தீர்ந்து விடும் என்று நாங்கள் நம்புகிறோம்.

"இந்த ஆண்டு தென்கிழக்கு ஆசியா, கிழக்கு ஆசியா மற்றும் தெற்காசியாவில் இருந்து வர்த்தக பார்வையாளர்கள் உட்பட 50,000 பார்வையாளர்கள் கண்காட்சிக்கு வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று டத்தோ ஹசன் அஸ்ஹாரி இட்ரிஸை தொடர்பு கொண்டபோது கூறினார்.

எட்டு எக்ஸ்போ அரங்குகள் மற்றும் இரண்டு மாநாட்டு அறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த பதிப்பின் அமைப்பு பெரிய அளவில் உள்ளது, இதனால் முக்கிய முதலீட்டு நுழைவாயிலாக மாறுவதற்கான மாநிலத்தின் முயற்சிகளை வலுப்படுத்தியது.

சிலாங்கூர் 2016 இல் SIBS ஐ அறிமுகப்படுத்தியது மற்றும் கடந்த ஆண்டு மாநாடு RM1.45 பில்லியன் உடன்பாடுகள் சாத்தியமான மதிப்பை பதிவு செய்தது, இது RM 350 மில்லியன் இலக்கை விட அதிகமாகும்.

623 கண்காட்சியாளர்கள் கலந்து கொண்ட கண்காட்சியானது ஆறு முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கியது மூலம் 44,342 பார்வையாளர்களைப் பெற்றது, அதாவது சிலாங்கூர் சர்வதேச கண்காட்சி (உணவு மற்றும் பானங்கள்) மற்றும் சிலாங்கூர் சர்வதேச கண்காட்சி (மருந்து). சிலாங்கூர் தொழில் பூங்கா கண்காட்சி, சிலாங்கூர் ஸ்மார்ட் சிட்டி மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம், சிலாங்கூர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் ஆசிய வணிக மாநாடு ஆகியவையும் ஏற்பாடு செய்யப்பட்டது.

# கமிஷன் கேட்பதை, கொடுப்பதை நிறுத்துங்கள்

**கோலாலம்பூர்,** வீடமைப்புத் திட்டங்கள் உள்பட எந்தவொரு மேம்பாட்டுப் பணியின் அமலாக்-கத்திலும் கமிஷன் கேட்கும் மற்றும் கொடுக்கும் பழக்கம் நிறுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தியுள்ளார்.

மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும் லாபத்தை ஈட்டுவதிலிருந்தும் எந்தவொரு நிறுவனத்தையும் அரசாங்கம் ஒருபோதும் தடுத்ததில்லை. எனினும், அமைச்சர்கள் அல்லது அரசியல் கட்சிகளுக்கு கமிஷன் கொடுப்பது ஒருபோதும் நிகழக்கூடாது என்று அவர் சொன்னார்.

நிறுவனங்கள் லாபம் பெறுவதால் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால், முன்பு கடைபிடிக்கப்பட்டதைப் போல அமைச்சர்கள் அல்லது அரசியல் கட்சிகளுக்கு ஒரு கோடி அல்லது ஒன்றரை கோடி வெள்ளி வழங்கும் பழக்கம் வேண்டாம். தங்களை நோகடிப்பதாக கருதி சிலர் என் மீது கோபத்துடன் இருப்பார்கள். ஆனால், எல்லோருக்கும் தெரியும். உண்மை தெரிய கூட்டரசு பிரதேசத்தில் உள்ள மேம்பாட்டாளர்களைக் கேளுங்கள் என்றார் அவர். நான் உண்மையில் தவறு புரிகிறேனா? அல்லது வேண்டுமென்றே விஷயங்களைப் பெரிது படுத்துகிறேனா? அல்லது நான் உண்மையைத்தான் சொல்கிறேனா? ஆனால் இது வழக்கமான நடைமுறை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இங்குள்ள டேசா தாசேக் சுங்கை பீசியில் ரெசிடன்ஸி விலாயா மற்றும் ரெசிடன்ஸி பெரிஹாத்தின் மடாணி திட்டங்களைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த கமிஷன் தொகையை மக்களிடமே திருப்பித் தருவதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வீடுகள் மற்றும் முறையான அங்காடி வியாபார மையங்களை அமைத்துத் தருவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஐ-தெக்காட் திட்டத்திற்கு RM6 மில்லியன் ஒதுக்கீடு

**கோலாலம்பூர்,** குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (PMKS), குறிப்பாக B40 குழுமத்திற்கு உதவும் ஐ-தெக்காட் சமூக நிதித் திட்டத்திற்கு மானிய ஒதுக்கீட்டை அரசாங்கம் RM6 மில்லியனாக உயர்த்தும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

2023 பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட RM4 மில்லியனிலிருந்து இந்த ஆண்டுக்கான ஐ-தெக்காட்டின் மொத்த உதவி தொகை RM10 மில்லியனாக இருக்கும் என்று அவர் கூறினார். தேசிய வறுமையை ஒழிக்கவும், பணக்காரர்களுக்கும் ஏழை-களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கவும் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றார்.

ஐ-தெக்காட் என்பது பேங்க் நெகாரா மலேசியாவால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இது குறைந்த வருமானம் கொண்ட குறுந்தொழில் முனைவோரின் நிதி மேலாண்மை மற்றும் வணிக நுண்ணறிவு தொடர்ந்து வருமானம் ஈட்டுவதையும் வலுப்படுத்த உதவுகிறது.

ஒவ்வொரு ஐ-தெக்காட் திட்டமும் நன்கொடைகள், சமூக முதலீடுகள், ஜகாத் மற்றும் ரொக்க வக்ஃப் போன்ற சமூக நிதிக் கருவிகளால் நிதி அளிக்கப்படும் வணிகச் சொத்துக்களை நுண்நிதியின், கட்டமைக்கப்பட்ட நிதி மற்றும் வணிகப் பயிற்சியுடன் ஒருங்கிணைக்கிறது.

## அரசு ஊழியர்களின் சம்பளம் மறு ஆய்வு

**ஜோகூர் பாரு,** வரும் அக்டோபர் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள இரண்டாவது மடாணி வரவு செலவுத் திட்டத்தில் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் சம்பள வரம்பை மறுஆய்வு செய்ய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

அரசு ஊழியர்களுக்கான சம்பள மற்றும் ஓய்வூதியத் திட்டம் மீதான விரிவான ஆய்வு அடுத்தாண்டுவாக்கில் முற்றுப்பெறும் வரை தற்காலிக நடவடிக்கையாக இந்த மறுஆய்வு மேற்கொள்ளப்படும் என்று அவர் சொன்னார்.

விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கான சம்பள முறை கடந்த 10 அல்லது 12 ஆண்டுகளாக மறுஆய்வு செய்யப்படாமலும் உயர்த்தப்படாமலும் இருந்து வருகிறது. விதிமுறைகளின்படி பத்தாண்டுகளுக்கு ஒரு முறை சம்பள முறை மறுஆய்வு செய்யப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இங்கு, ஸ்கூடாயில் உள்ள மலேசிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அன்வாருடன் சந்திப்பு நிகழ்வில் அவர் இதனைக் கூறினார். இந்த விவகாரத்தை ஆராய்வதற்கு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அன்வார் குறிப்பிட்டார்.

சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு நீடித்த இந்த கலந்துரையாடல் நிகழ்வில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் உள்பட 4,000கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## திவேட் திட்டம் - மாற்றுத் திறனாளிகளுக்கு நிபந்தனைத் தளர்வு

**ஜோகூர் பாரு,** திவேட் எனப்படும் தொழில்நுட்ப மற்றும் தொழில் திறன் பயிற்சித் திட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதாக பங்கேற்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு நிபந்தனைத் தளர்வு வழங்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த நிபந்தனைத் தளர்வை அமல்படுத்தும்படி திவேட் மன்றத்தின் தலைவரான துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ அகமது ஜாஹிட் ஹமிடியை தாம் கேட்டுக் கொள்ளவுள்ளதாக அவர் சொன்னார். பயிற்சியின் பங்கேற்பாளர்களுக்கு இரு கைகளும் கட்டாயம் இருக்க வேண்டும் என்பது போன்ற கடுமையான நிபந்தனைகள் மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது விதிக்கப்படாத போதிலும் அவர்களின் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு நாம் மேலும் சில தளர்வுகளை வழங்கவுள்ளோம் என்றார் அவர்.

இங்குள்ள ஸ்கூடாய் மலேசிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற அன்வாருடன் சந்திப்பு எனும் நிகழ்வில் கலந்து கொண்டு பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அன்வார், இந்த விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய இவ்விவகாரத்தை தாம் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுச் செல்லவுள்ளதாக சொன்னார்.

## முன்னணி முதலீட்டாளர்களுடன் அன்வார் சந்திப்பு

**கோலாலம்பூர்,** முக்கிய பொருளாதாரத் துறைகளில் வியூக முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக முன்னணி முதலீட்டாளர்கள் சிலருடன் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று புத்ரா ஜெயாவில் சந்திப்பு நடத்தினார். பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலை ஏற்படுத்து வதற்கும் மடாணி பொருளாதார இலக்கை அடைவதற்கும் ஏதுவாக இந்த முயற்சி முன்னெடுக்கப்படுவதாக அன்வார் கூறினார். தேசியப் பொருளாதார ஒழுங்கைச் செயல்படுத்துவதற்கும் அனைத்து மலேசியர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்குமான விரிவான மற்றும் தெளிவான செயல் திட்டமாக மடாணி பொருளாதாரக் கொள்கை விளங்குகிறது என்று அவர் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியை உந்தச் செய்வதில் தனியார் மற்றும் முதலீட்டாளர்கள் பங்கேற்பதன் முக்கியத்துவத்தை இந்த தொலைநோக்கு திட்டம் வலியுறுத்துகிறது. இதன் மூலம் புத்தாக்க நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுவதோடு உயர் தரத்திலான மற்றும் அதிக தாக்கம் கொண்ட வேலை வாய்ப்புகளையும் உருவாக்குகிறது என்று அவர் மேலும் சொன்னார். பொருளாதார மேம்பாட்டிற்கும் தங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை வழங்கிய மற்றும் அனைத்துலக நிலையில் செல்வாக்கை கொண்ட முதலீட்டாளர்கள் சிலர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாக அன்வார் தெரிவித்தார்.

# ருக்குன் நெகாரா கிளப்
## தனியார் பள்ளிகளில் விரிவுபடுத்தப்படும்

**கோலாலம்பூர்,** இளைய தலைமுறையினரிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கும் முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு தனியார் கல்விக் கூடங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள பள்ளிகளுக்கு ருக்குன் நெகாரா கிளப் விரிவுபடுத்தப்படும்.

ருக்குன் நெகாரா வில் உள்ள ஐந்து கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவதிலும் பயன்படுத்துவதிலும் இந்த கிளப் முக்கிய பங்கு வகிக்கிறது என்று கல்வி அமைச்சர் ஃபாட்லினா சிடேக் கூறினார்.

நாடு முழுவதும் 6,000க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்கும் இந்த கிளப், ருக்குன் நெகாரா கோட்பாட்டின் சித்தாந்தம் மற்றும் கொள்கைகளை மாணவர்கள் புரிந்துகொண்டு அமல்படுத்தும் வகையில் விரிவுபடுத்தப்படுவது முக்கியம் என்றார் அவர்.

இந்த நாட்டின் பலம் உடல் ரீதியாக மட்டும் பார்க்கப்படுவதில்லை மாறாக, அதன் மக்களின் ஆன்மா மற்றும் உணர்வுகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

பள்ளிகளில் ஒற்றுமைக்கான தலைவர்களாக இந்த ருக்குன் நெகாரா கிளப்புகள் விளங்கும். அதன் அடிப்படையில் இந்த கிளப்புகளை விரிவுபடுத்த விருக்கிறோம். இதற்கு தொடர்பான தகவல்கள் தொடர்ந்தாற்போல் வழங்கப்படும் என அவர் கூறினார்.





# பண்ணைகளில் கோழி பற்றாக்குறை
# தொடர்பில் புகார் இல்லை

**புத்ரா ஜெயா,** கோழி விநியோகத்தில் பற்றாக்குறை நிலவுவதாக வெளிவந்த புகார்களைத் தொடர்ந்து அந்த அத்தியாவசிய உணவுப் பொருளின் விலை உயர்வு கண்டுள்ள நிலையில் பண்ணை அளவில் கோழி விநியோகத்தில் பற்றாக்குறை நிலவவில்லை என்று கால்நடைச் சேவைத் துறை கூறியுள்ளது.

கோழிகள் அதிகளவில் இறப்பதற்கு காரணமான நோய் பரவல் தொடர்பிலும் தாங்கள் எந்த புகாரையும் பெறவில்லை என்று அத்துறை தெரிவித்தது.

ஆகவே, கோழி பற்றாக்குறை தொடர்பான தகவல்களைக் கேட்டு பதட்டமடைய வேண்டாம் என பொதுமக்களை அத்துறை அறிக்கை ஒன்றின் வாயிலாக கேட்டுக் கொண்டது.

விநியோகப் பற்றாக்குறை காரணமாக கோழியின் விலை உயர்வு கண்டுள்ளதாக வெளிவந்த பத்திரிகைத் தவல்கள் தொடர்பில் அத்துறை இந்த விளக்கத்தை அளித்தது.

அண்மைய சில தினங்களாக கோழி விநியோகப் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் இதன் காரணமாக சந்தைகளில் கோழியின் விலை வெ. 9.00 முதல் வெ.9.28 வரை உயர்வு கண்டுள்ளதாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டிருந்தது.

கோழி பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் அது குறித்து மாவட்ட மாநில கால் நடை சேவைத் துறை அல்லது மாநில கால்நடைச் சேவைத் துறையிடம் தகவல் அளிக்கும்படி பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.




# மலேசிய தமிழ் இளைஞர் மணி மன்றத்திற்கு
# 50,000 வெள்ளி மானியம்

**புத்ரா ஜெயா,** நாட்டில் துடிப்புமிக்க இயக்கங்களில் ஒன்றான மலேசிய தமிழ் இளைஞர் மணிமன்றத்திற்கு மனிதவள அமைச்சர் வ. சிவகுமார் 50,000, வெள்ளி மானியம் வழங்கி பேருதவி புரிந்துள்ளார்.

மலேசிய தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் தலைவர் முருகன் தலைமையிலான பொறுப்பாளர்களிடம் நேற்று 50,000 வெள்ளிக்கான மானியத்தை அவர் ஒப்படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1956-ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்ட மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம் சிறப்பாக செயலாற்றி வருகின்றது.

தமிழ் சார்ந்த, கலை, கலாச்சாரம் நிகழ்வுகளையும் தலைமைத்துவப் பயிற்சி செயல்திறன் பயிற்சி என இளைஞர்களுக்கு பல பயிற்சிகளும் வழங்கி கொண்டு வருகிறது.

சிறப்பாக செயல்படும் தமிழ் இளைஞர் மணிமன்றம் இன்று அதன் பேரவையின் தலைவர் திரு. ம.முருகன் தலைமைத்துவத்தின் கீழ் பீடு நடை போடுகிறது.

இதனிடையே மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம் மேலும் துடிப்புடன் செயல்பட மலேசிய மனிதவள அமைச்சர் மாண்புமிகு சிவகுமார் அவர்கள் 50,000 வெள்ளியை வழங்கியது பாராட்டுக்குரியது என்று மணிமன்றத் தலைவர் முருகன் தெரிவித்தார்.

அவருடனான இந்த சந்திப்பில் மலேசியத் தமிழ் இளைஞர் மணி மன்றங்களின் தலைவர் திரு.ம.முருகன், உதவித் தலைவர் கே.கணேஷ், ஜோகூர் மாநிலத் தலைவர் திரு ஹரி,விலாயா மாநிலத் தலைவர் திரு செல்வகுமார், துணைச் செயலாளர் திரு சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பரம ஏழைகளுக்கு உதவ
# அமானா சஹாம் ரஹ்மா திட்டம்



**கோலாலம்பூர்,** நாட்டில் மிகவும் வறிய நிலையிலுள்ள ஏழைகளுக்கு உதவும் வகையில் அமானா சஹாம் ரஹ்மா எனும் அறங்காப்பு நிதித் திட்டத்தை உருவாக்குவது குறித்து உள்நாட்டு வர்த்தக மற்றும் வாழ்க்கைச் செலவின அமைச்சு பரிசீலித்து வருகிறது.

வாழ்க்கைச் செலவின அதிகரிப்பினால் ஏழைகளுக்கு ஏற்பட்டுள்ள சுமையைக் குறைப்பதிலும் அத்தரப்பினர் நீண்ட கால அடிப்படையில் வருமானத்தைப் பெறுவதை உறுதி செய்வதிலும் இந்த திட்டம் துணை புரியும் என்று அதன் துணையமைச்சர் பவுஸியா சாலே கூறினார்.

இந்த அறங்காப்புத் திட்டத்தின் கீழ் கணிசமானத் தொகையை குறிப்பிட்ட சில நிறுவனங்களில் அரசாங்கம் முதலீடு செய்யும். அந்த நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் லாப ஈவுத் தொகை உதவித் தேவைப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும். அதே சமயம் அசல் மூலதனத் தொகை அரசாங்கத்தின் சொத்தாக தொடர்ந்து அந்நிறுவனங்களில் இருந்து வரும் என்றார் அவர்.

இந்த அமானா சஹாம் ரஹ்மா திட்டத்தை அமல்படுத்துவதற்கான சரியான வழிமுறையை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். நிதிக் கணக்கில் முதலீடு செய்வதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட நிதியை சேமநிதியில் வைக்கலாம் என அவர் தெரிவித்தார்.

# பிரீமியர் லீக் கிண்ணத்தை கிளானா யுனைடெட் கைப்பற்றியது

**சுபாங் ஜெயா,** சிலாங்கூர் கால்பந்து சங்கத்தின் (எஃப்.ஏ.எஸ்.) 2023ஆம் ஆண்டிற்கான சூப்பர் லீக் போட்டியின் வெற்றியாளராக எம்.பி.எஸ்.ஏ. எஃப்.சி. வாகை சூடியது. இங்குள்ள எம்.பி.எஸ்.ஜே. அரேனா அரங்கில் நடைபெற்ற இதன் இறுதியாட்டத்தில் போஸ் எப்.சி. குழுவை அது 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த து.

ஆட்டத்தின் 15வது நிமிடத்தில் பெனால்டி பகுதியிலிருந்து தாக்குதல் ஆட்டக்காரர் மஹாடி அஷாராப் நடத்திய மின்னல் வேகத் தாக்குதல் கோல் காவலரை மீறி வலைக்குள் புகுந்தது.

இவ்வாண்டிற்கான சூப்பர் லீக் போட்டியில் மொத்தம் 18 குழுக்கள் வெற்றியாளர் கிண்ணத்தை வாகை சூடுவதற்காக களம் இறங்கின.

இதனிடையே முன்னதாக நடைபெற்ற 2023ஆம் ஆண்டிற்கான எஃப்.ஏ.எஸ். பிரீமியர் லீக் போட்டியில் கிளானா யுனைடெட் குழு புத்ரா பெர்வீரா குழுவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றியாளர் கிண்ணத்தை வென்றது.

ஆட்டத்தின் 67வது நிமிடத்தில் பினால்டி கட்டத்திற்குள் இருந்து அஸாமுடின் அகில் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. அப்பந்தை கிளானா யுனைடெட் குழுவின் மற்றொரு ஆட்டக்காரரான இல்யா ஃபித்ரி லாவகமாக தலையில் முட்டி கோலாக்கினார்.

இந்த இறுதியாட்டத்திற்கு சிறப்பு வருகை புரிந்த சிலாங்கூர் ராஜா மூடா தெங்கு அமீர் ஷா இரு பிரிவுகளிலும் வெற்றி பெற்ற ஆட்டக்காரர்களுக்கு வெற்றியாளர் கிண்ணத்தையும் பரிசுகளையும் வழங்கினார்.







## சிலாங்கூர் ஹாக்கி அணி விளையாட்டாளர்களைத் தேடுகிறது

**ஷா ஆலம்,** அடுத்த ஆண்டு சரவாக்கில் நடைபெறவுள்ள மலேசியா விளையாட்டுப் போட்டியில் (சுக்மா) மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த புதிய திறமையான விளையாட்டா-ளர்களைச் சிலாங்கூர் ஆண்கள் மற்றும் பெண்கள் ஹாக்கி அணி தேடுகிறது.

16 முதல் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் என இரண்டு பிரிவுகளில் தேடுதல் நடத்தப்படுவதாக விளையாட்டு சங்கம் அறிவித்தது. இதில் சிலாங்கூரில் பிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

"சிலாங்கூர் ஹாக்கி சங்கம், சிலாங்கூர் மாநில விளையாட்டு கவுன்சிலுடன் இணைந்து 20 வயதுக்குட்பட்ட திறமையான புதிய விளையாட்டாளர்களைத் (ஆண்கள் மற்றும் பெண்கள்) தேர்வு செய்கிறது.

"ஆர்வமுள்ள சகோதர சகோதரிகளே வாருங்கள். சுக்மா 2024 விளையாட்டில் சிலாங்கூர் மாநிலத்தைப் பிரதிநிதிப்பதற்கான வாய்ப்பை நழுவ விடாதீர்கள்," என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

ஆர்வமுள்ளவர்கள் **https://docs.google.com/forms/d/e/1FAIpQLSczU-3JPMxGPR727pZMkUUfAEaW76weu_xxuxpkyRcMWaITF3w/viewform?us-p=sf31link** என்ற இணைப்பில் உள்ள விண்ணப்பப் படிவத்தில் முழுமையான தனிப்பட்ட தகவல்களை ஆகஸ்ட் 31க்குள் நிரப்பலாம்.

## எம்.பி.எஸ்.ஏ. குழுவின் வரலாற்றுச் சாதனை

**சுபாங் ஜெயா,** சிலாங்கூல் கால்பந்துசங்கத்தின்(எஃப்.ஏ.எஸ்.) 2023ஆம் ஆண்டிற்கான சூப்பர் லீக் கிண்ணத்தை வென்றதன் மூலம் கால்பந்து வரலாற்றில் ஷா ஆலம் மாநகர் மன்றம் மகத்தான சாதனையைப் புரிந்துள்ளது.

விளையாட்டாளர்களின் கட்டொழுங்கு மற்றும் கடுமையான உழைப்பு இந்த வெற்றிக்கு மூலகாரணமாக விளங்கியதாக அக்குழுவின் பயிற்றுநர் அகமது ஃபைசால் யூனுஸ் கூறினார்.

நேற்றிரவு நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் விளையாட்டு பொறுப்பாளர்கள், விளையாட்டாளர்கள் மற்றும் ரசிகர்கள் காட்டிய கடப்பாடு இந்த வெற்றியை ஈட்டுவதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தியது என்று அவர் குறிப்பிட்டார்.

எம்.பி.எஸ்.ஏ. கிளப் வரலாற்றில் முதன் முறையாக இந்த கிண்ணத்தை நாங்கள் வென்றுள்ளோம். விளையாட்டா-ளர்களின் புரிந்துணர்வும் நான் வழங்கிய பயிற்சி மற்றும் விளையாட்டு நுட்பங்களை ஆட்டக்காரர்கள் முழுமையாக பின்பற்றியதும் இந்த சாதனையை நிகழ்த்துவதற்கு முக்கியமானதாக விளங்கியது என அவர் சொன்னார்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து அடுத்து நடைபெறவிருக்கும் சிலாங்கூர் சாம்பியன்ஷிப் லீக் போட்டிக்கு தயாராவது தங்களின் அடுத்த இலக்காகும் என அவர் சொன்னார். சூப்பர் லீக் கிண்ண வெற்றியாளர் என்ற முறையில் சிலாங்கூர் லீக் சாம்பியன்ஷிப் போட்டிக்கு எம்.பி.எஸ்.ஏ. குழு இயல்பாகவே தேர்வாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றது தமக்கு இரட்டை மகிழ்ச்சியைத் தந்துள்ளதாக கூறிய அவர், சூப்பர் லீக் போட்டியில் கிண்ணத்தை வென்றது மற்றும் சிறந்த விளையாட்டாளராக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என்றார்.

## கால்பந்து விளையாட்டு பயிற்சியாளர்களாக ஓர் அரிய வாய்ப்பு

**ஷா ஆலம்,** கால்பந்து விளையாட்டு பயிற்சியாளர்களாக ஆர்வமுள்ளவர்களுக்குச் சிலாங்கூர் எஃப்சி வாய்ப்பை வழங்குகிறது. எலிட் திட்டங்களில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது இளம் வீரர்களுக்குப் பயிற்சி அளித்தவர்கள் இத்திட்டத்தின் வெற்றிக்கு அவசியம் என முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

"செல்லுபடியாகும் சான்றிதழ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தகுதிகளைக் கொண்ட பயிற்சியாளர்கள், சிலாங்கூர் எஃப்சியில் ஒரு பகுதியாக சேர்ந்துக் கொள்ள முயற்சி செய்யலாம்," என்று அவர் கூறினார்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பத்தை **soccerschool@selangorfc.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

# ராக்கான் மூடா 80,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்பு



**பெட்டாலிங் ஜெயா,** இவ்வாண்டு ஜூன் மாதம் மீண்டும் புத்துயிரூட்ட பட்ட ரக்கான் மூடா திட்டத்திற்கு இளைஞர்கள் மத்தியில் ஊக்கமூட்டும் ஆதரவு கிடைத்து வருகிறது.

இத்திட்டத்தில் இதுவரை 15 முதல் 30 வயதுக்குட்பட்ட 80,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றுள்ளதாக இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹன்னா இயோ கூறினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் **https://www.kbs.gov.my/rakamuda.html** என்ற அகப்பக்கம் மூலம் அல்லது **rakanmuda@kbs.gov.my** . என்ற மின்னஞ்சல் வாயிலாக பதிவு செய்து ரக்கான் மூடா திட்டத்தில் பங்கேற்குமாறு இளைஞர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

கடந்த காலத்தில், ராக்கான் மூடா திட்டம் பள்ளி அளவில் மட்டுமே இருந்தது ஆனால் இப்போது நாங்கள் அதை 15 முதல் 30 வயதுடையவர்களுக்கு அதாவது பள்ளிக்கு வெளியில் உள்ளவர்களுக்கும் திறந்துள்ளோம் என்று அவர் சொன்னார்.

இன்று நான் சிலாங்கூர் மாநிலத்தில் ராக்கான் மூடா தொடக்க நிகழ்வுக்கு வந்தேன். அவர்கள் பெட்டாலிங் ஜெயா ரக்கான் மூடா வளாகத்தை மையமாகக் கொண்டு இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளனர் என்றார் அவர்.

இன்று இங்கு நடந்த சிலாங்கூர் மாநில அளவிலான மினி ராக்கான் மூடா நிகழ்ச்சியின் தொடக்க நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ரக்கான் மூடா திட்டத்தை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த ஜூன் 25 ஆம் தேதி மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் தொடக்கி வைத்தார்.

# ஆட்சிக்குழு இல்லாவிட்டாலும் மாநில மக்களுக்கு சேவை தொடரும்



**கிள்ளான்-** ஆட்சிக் குழுவில் இடமில்லை என்றாலும் மாநில மக்களுக்கான தனது சேவை தொடரும் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் குணராஜ் உறுதிபடக் கூறினார்.

சிலாங்கூர் மாநில சட்டமன்றத் தேர்தல் அண்மையில் நடைபெற்று முடிந்தது. டத்தோஸ்ரீ அமிரூடின் ஷாரி மந்திரி புசாராக மீண்டும் பதவியேற்றுள்ளார்.

அவரின் தலைமையில் 10 ஆட்சிக் உறுப்பினர்களும் பதவியேற்றுக் கொண்டுள்ளனர். இனி இந்த விவகாரத்தில் அதிருப்திகளை வெளிப்படுத்தி எந்தவொரு பயனும் இல்லை. அதே வேளையில் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் எடுக்கும் முடிவுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும்.மேலும் நம்பிக்கை கூட்டணியும் தேசிய முன்னணியும் இணைந்து சிலாங்கூர் மாநிலத்தில் ஆட்சியமைத்துள்ளன.தேர்தல் காலத்தில் மாநில மக்களின் நலனுக்காக பல வாக்குறுதிகளும் வழங்கப்பட்டது.

அடுத்த தேர்தலில் ஆட்சியைத் தற்காக்க வேண்டும் என்றால் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். மக்களுக்கு உரிய சேவைகளை வழங்க வேண்டும். இந்த விவகாரங்களில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று குணராஜ் கேட்டுக் கொண்டார்.

# இளைஞர்களுக்கு 100,000 வேலை வாய்ப்புகள்



**ஷா ஆலம்-** சிலாங்கூரில் இளைஞர்களுக்கு அதிக ஊதியம் தரும் 100,000 வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். பொருளாதார அமைச்சரால் அறிவிக்கப்பட்ட புதிய கொள்கைகளை அறிமுகப் படுத்தியதோடு, முதல் சிலாங்கூர் திட்டத்தின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை சாத்தியமானது என்று மந்திரி புசார் விளக்கினார்.

**இளைஞர்களுக்கான பிற திட்டங்கள்:**

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் கித்தா சிலாங்கூர் இ-ஸ்போட் மையங்களை உருவாக்குதல்.
2. 2025ஆம் ஆண்டு மலேசியா கோப்பை, சுக்மா, சூப்பர் லீக், மற்றும் 2027 ஆம் ஆண்டு ஆசிய கோப்பை ஆகியவற்றில் சாம்பியன் ஆவது
3. 2,000 சிலாங்கூர் இளைஞர்களுக்கு மாதந்தோறும் RM1,500 சம்பளத்துடனான தொழில்துறை பயிற்சி (இன்டர்ன்ஷிப்) வழங்குதல்.
4. ரோடா டாருள் ஏஹ்சான் (RIDE) திட்டத்தை இ-ஹெய்லிங் ஓட்டுநர்களுக்கு விரிவுபடுத்துதல்

# பகடிவதை, பாலியல் சம்பவங்களுக்கு 15 நாட்களில் தீர்வு

**புத்ரா ஜெயா,** உயர்கல்விக் கூடங்களில் பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடபில் செய்யப்பட்ட புகார்களில் 90 விழுக்காடிற்கு 15 நாட்களில் தீர்வு காணப்பட்டதாக கல்வியமைச்சு கூறியது.

நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைக்கேற்ப பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்கள் மற்றும் தகவல்களை விரைவுபடுத்தும் நடைமுறையை பின்பற்றும்படி அனைத்து மாவட்ட, மாநில கல்வித் துறைகள் மற்றும் உயர்கல்விக் கூடங்கள் பணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உயர்கல்விக் கூட பணியாளர்கள் உள்பட அனைத்து தரப்பினருக்கும் உகந்த பாதுப்பான சூழல் நிலவுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக கல்வியமைச்சின் கீழுள்ள அனைத்து உயர்கல்விக் கூடங்களிலும் பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விவகாரங்களுக்கு ஆக்ககரமான முறையில் தீர்வு காணப்படுவதை அமைச்சு எப்போதும் உறுதி செய்து வந்துள்ளது என அவ்வறிக்கை தெரிவித்தது.

பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான பிரச்சனைகளை கையாள்வது தொடர்பான வழிகாட்டியை மற்றும் மாணவர் கட்டொழுங்கு விதிமுறை ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியில் அமைச்சு ஈடுபட்டு வருகிறது.

1957ஆம் ஆண்டு கல்விச் சட்டம் மற்றும் (1959ஆம் ஆண்டு கட்டொழுங்கு) கல்வி விதிமுறைகளுக்கு பதிலாக இந்த புதிய விதிமுறைகள் அமல் செய்யப்படும் எனவும் அமைச்சு கூறியது.




Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor